# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 05 திருவள்ளுவர் ஆண்டு 2025 மாசி 12 (24.02.94) வியாழக்கிழமை ஓசை 06


## தனிநபர் சுகாதாரம் பேணுக

வடமராட்சி வடக்குப் பிரதேசத்தில் வல்வெட்டித்துறை, புலோலி மேற்கு ஆகிய பகுதியில் இருந்து 20 வாந்திபேதி நோயாளர்கள் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். தங்கவேலு வரதராசா 11 வயதான பாடசாலை மாணவன் வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் 17-02-94 காலை 6.00மணிக்கு அனுமதிக்கப்பட்டவர் நோய் தீவிரமானதும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு இரவு 8.30மணிக்கு சேர்க்கப்பட்டவுடன் அங்கு மரணமானார். ஏனைய மூவரும் தனியார் சிகிச்சை பெற்று இறந்தனர். இதனைத் தொடர்ந்து தடுப்பு நடவடிக்கையையும் விடுதலைப் (6ஆம் பக்கம் பார்க்க)

# மணலாற்றில் புலிகள் அதிரடி

# 'பவல்' கைப்பற்றி அழிப்பு; ஆறு இராணுவத்தினர் பலி

## விசேட துணைப்படையினரும் பங்குபற்றினர்

(மணலாறு)

**மணலாற்றுப் பகுதியில் சிறிலங்கா இராணுவ அணி மீது விடுதலைப்புலிகள் நடத்திய திடீர் தாக்குதல் ஒன்றில் ஆறு படையினர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். இராணுவத்தினரின் பவல் கவச வாகனம் ஒன்று கைப்பற்றி அழிக்கப்பட்டது.**

**விடுதலைப் புலிப் போராளிகளுடன் இணைந்து விசேட துணைப்படை வீரர்களும் பங்குபற்றிய இத்தாக்குதலின் போது பல நவீன ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. இரு போராளிகள் வீரச்சாவடைந்தனர்.**

நேற்றுக்காலை 8-35 மணியளவில் கப்பிலிவெல இராணுவ முகாமிலிருந்து பவல் கவசவாகனம் சகிதம் கடக்வேவ சந்தி நோக்கி முன்னேறிய இராணுவ அணியினர் மீது முகாமிலிருந்து சுமார் 600 யார் தொலைவில் வைத்து விடுதலைப் புலிகளும் விசேட துணைப்படை வீரர்களும் இணைந்து திடீர் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டனர்.

இத்தாக்குதலின் போது பவல் கவசவாகனம் விடுதலைப்புலிகளால் கைப்பற்...

மற்றும் இரு உலங்குவானூர்திகள் இணைந்து அகோரத் தாக்குதலை மேற்கொண்டன. இத்தாக்குதல் தொடர்ந்து நடைபெறுவதாக தெரிவிக்கப்படுகிறது. சிறிலங்கா அரசதரப்புச் செய்திகள் இத்தாக்குதலை ஊர்ஜிதம் செய்துள்ளன, இதேவேளை கடந்த மூன்றுநாட்களில் இப்பிரதேசத்தில் விடுதலைப்புலிகள் நடாத்திய இரண்டாவது தாக்குதல் இது என்பது குறிப்பிடத்தக்கது;

இத்தாக்குதல் குறித்து பி.பி.ஸி, தெரிவிக்கையில் இராணுவத்தினர் பயன்படுத்திய பவல் கவசவாகனத்தில் பெருமளவு வெடிப்பொருட்கள் இருந்ததாக சுட்டிக்காட்டியுள்ளது.

## கைப்பற்றப்பட்ட நவீன ஆயுதங்கள்

(வவுனியா)

மணலாறு மாவட்டத்திலுள்ள கப்பிலிவெலி இராணுவ முகாமுக்கு சமீபமாக விடுதலைப் புலிகளும் விசேட துணைப்படை வீரர்களும் இணைந்து இராணுவத்தினர் மீது ...

ஃ ரி 56-1 ரக துப்பாக்கி — 01
ஃ ரி 56 பட்மொடல் துப்பாக்கி — 01
ஃ எல் 3 ரக ரவை லிங்குடன் — 570
ஃ மொபைல் செற் — 01
ஃ பொறின் குண்டு — 02

## 'விடுதலைப்புலிகள்' ஏடு நாளை வெளிவருகின்றது

தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடான 'விடுதலைப்புலிகள்' இதழின் மாசிமாத (குரல்46) இதழ் நாளை வெளிவருகின்றது.

''பேரினவாதிகள் இணைகின்றனர்; சிங்களப் போர் அரக்கன் தயாராகின்றான்'' என்ற தலைப்புச்செய்தியைக் கொண்டுள்ள இவ் இதழில் அன்ரன் பாலசிங்கம் எழுதிய ''போரும் சமாதானமும்'' என்ற கட்டுரை இடம்பெற்றுள்ளது. அண்மைக்கால சமரச முயற்சிகள் தொடர்பாக புலிகள் இயக்கத்தின் நிலைப்பாட்டை எடுத்து விளக்குவதாகவும், தற்போதைய அரசியல் நிலைபற்றிய ஓர் ஆய்வுரையாகவும் அக் கட்டுரை அமைந்துள்ளது.

மேலும் ''சிங்கள தேசம் எதை விரும்புகின்றது?'' என்ற கருத்துரையும், ''முறியடிக்கப்பட்ட முற்றுகை'' என்ற தலைப்பில் குடாநாடு மீதான முற்றுகைப்போர்மீது ஒரு மேலோட்டமான பார்வையும், ''இரத்தமும், தசையும், உயிருமாக-தென் தமிழீழத்து வாழ்வு'' என்ற தொகுப்புரையும், வே. பாலகுமாரன் எழுதிய கடற் புலிகள் நூல்பற்றிய மதிப்புரையும், கப்டன் துளசிரா என்ற போராளியின் குருதிச்சுவடும் இவ் இதழில் இடம்பெற்றுள்ளன.

அத்துடன் 'வெல்லும்வரை வேகம் குறைந்தால், செல் (6ஆம் பக்கம் பார்க்க)

## அத்தியாவசிய பொருட்களுக்கான கப்பல் கட்டணம் அரச அதிபரிடம் அறவிடல் தற்காலிக நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ் அரச அதிபரின் பெயரில் யாழ். குடா நாட்டிற்கு எடுத்து வரப்படுகின்ற உணவு மற்றும் பொருள்களுக்கான கப்பல் கூலி யாழ். அரச அதிபரினால் செலுத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

இதற்கான அறிவித்தலை கொழும்பில் இருந்து அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் யாழ். அரச அதிபருக்கு விடுத்துள்ளதாக அவர் நமது நிருபருக்கு தெரிவித்தார்.

இதற்கு முன்னர் யாழ். அரச அதிபரின் பெயரில் வருகின்ற பொருள்களுக்கான கப்பல் கூலியை அவரே செலுத்திவந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. தற்சமயம் இக் கப்பல் கூலியை அரசே பொறுப்பேற்கும் என தெரிவிக்கப்பட்டது. (பா)

## கரையோரம் மீதான தடைச்சட்டம் மார்ச் 1 முதல் நீக்கப்படும்

(நமது நிருபர்)

சிறிலங்கா அரசினால் பிறப்பிக்கப்பட்ட வடபகுதிக் கடற்கரையோரம் மீதான தடைச்சட்டம் அடுத்தமாதம் முத...

மேற்படி கடற் பகுதியில் கடற்புலிகளின் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளது என்பதைக் காரணம் காட்டி சென்றவருடம் செப்ரெம்பர் ...

இது தொடர்பாக அப்போது சிறிலங்கா அரசின் பாதுகாப்பு வட்டாரங்கள் வெளியிட்ட அறிவிப்பில் மன்னார் நகர் வடக்கில் ...

வேண்டும் என்ற நிபந்தனை தற்காலிகமாக நிறுத்தப்பட் தார்.

இதற்கு முன்னர் யாழ்.

அரசே பொறுப்பேற்கும் என தெரிவிக்கப்பட்டது. (பா)

# கரையோரம் மீதான தடைச்சட்டம் மார்ச் 1 முதல் நீக்கப்படும்

(நமது நிருபர்)

சிறிலங்கா அரசினால் பிறப்பிக்கப்பட்ட வடபகுதிக் கடற் கரையோரம் மீதான தடைச் சட்டம் அடுத்தமாதம் முதலாம் திகதியில் இருந்து நீக்கப்படவுள்ளது.

இதுபற்றி சிறிலங்கா அரசிடம் இருந்து யாழ் அரச அதிபர் கா. மாணிக்கவாசகருக்கு அவசர வானொலிச் செய்தி ஒன்று நேற்று மாலை அனுப்பிவைக்கப்பட்டுள்ளது

மேற்படி கடற் பகுதியில் கடற்புலிகளின் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளது என்பதைக் காரணம் காட்டி சென்றவருடம் செப்ரெம்பர் மாதம் இரண்டாம் திகதி நள்ளிரவு தொடக்கம் இச் சட்டம் அமுலிற்கு கொண்டு வரப்பட்டது. இதற்கான உத்தரவை சிறிலங்கா ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா பிறப்பித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாக அப்போது சிறிலங்கா அரசின் பாதுகாப்பு வட்டாரங்கள் வெளியிட்ட அறிவிப்பில் மன்னார் நகர் வடக்கில் இருந்து திருகோணமலை வரையிலான கடலில் வள்ளங்கள் அல்லது கப்பல்கள் செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது எனவும் பொதுப் பாதுகாப்புப் பிரமாணங்களுக்கேற்ப இது பிரகடனம்

(6ஆம் பக்கம் பார்க்க)

# கிழக்கில் தேர்தல் முடியும்வரை கிராமங்களைவிட்டு வெளியேறத் தடை

நேற்றுமுதல் உள்ளூராட்சித் தேர்தல்வாக்கு நடக்கும் திகதியான எதிர்வரும் முதலாம் திகதிவரை பொதுமக்களைத் தத்தமது கிராமங்களைவிட்டு வெளியே செல்லாதவாறு இராணுவத்தினர் தடைவிதித்துள்ளனர். உணவுப் பொருள்களை வாங்கச் செல்வதற்குக்கூட இராணுவம் அனுமதி கொடுக்கவில்லை.

இவ்வாறான அழுத்தங்களுக்கு மத்தியில் இராணுவத்தினர் காலையில் கிராமங்களைச் சுற்றிவளைத்து அக் கிராமங்களில் உள்ள பாடசாலைகளுக்கு பலாத்காரமாக மக்களைக் கொண்டு சென்று தேர்தல் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

தேர்தல் பிரசாரத்திலும்

(6ஆம் பக்கம் பார்க்க)

# உள்ளூராட்சி தேர்தலுக்கு வவுனியாவில் படை குவிப்பு

(நமது நிருபர்)

உள்ளூராட்சித் தேர்தல்கள் நெருங்கும் வேளையில் வவுனியா பகுதியில் வாழும் தமிழ் மக்கள் மத்தியில் பெரும் பதற்ற நிலை தோன்றியுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் முதலாம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தல்களை ஒட்டி வவுனியா நகருக்குள் மேலதிகமாக பெருமளவு இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அனைத்து பிரதான வீதிகள் தோறும் நாட்டப்பட்டுள்ள மின்கம்பங்கள் ஒவ்வொன்றின் கீழும் ஒரு சிப்பாய் வீதம் அனைத்து மின்கம்பங்களின் கீழும் இரவு பகலாக காவல் புரிவதாகவும் தெரியவந்துள்ளது.

இச் சிப்பாய்களுக்கு பாதுகாப்பளிக்கும் முகமாக ஒவ்வொரு மின்கம்பங்களிலும் விசேட மின் விளக்குகள் பொருத்தப்பட்டு ஒரு பகுதி மறைக்கப்பட்டுள்ளதாகவும் இவ் இருளில் சிப்பாய்கள் பாதுகாப்பாக பதுங்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து தேர்தலை ஒட்டி ஏதாவது அசம்பாவிதங்கள் நிகழலாம் என அஞ்சிய தமிழ் மக்கள் அப் பகுதிகளில் இருந்து வெளியேறி கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாண பகுதிகளுக்கு இடம்பெயர்ந்த வண்ணமுள்ளதாக அங்கிருந்து வந்த ஒருவர் தெரிவித்தார்.

## 'ஹெந்தல' கப்பலில் 1950 மெ. தொன் மா

(யாழ்ப்பாணம்)

தற்சமயம் பருத்தித்துறை துறைமுகத்தில் பொருள்களை இறக்கிக் கொண்டிருக்கும் ''ஹெந்தல'' கப்பல் திருகோணமலை சென்று 1950 மெற்றிக் தொன் மாவை ஏற்றிக் கொண்டு பருத்தித் துறைக்கு மீண்டும் வரவுள்

(6ஆம் பக்கம் பார்க்க)

ணுவ முகாமிலிருந்து பவல் கவசவாகனம் சகிதம் கடக்கவேவ சந்தி நோக்கி முன்னேறிய இராணுவ அணியினர் மீது முகாமிலிருந்து சுமார் 600 யார் தொலைவில் வைத்து விடுதலைப் புலிகளும் விசேட துணைப்படை வீரர்களும் இணைந்து திடீர் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டனர்.

இத்தாக்குதலின் போது பவல் கவசவாகனம் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டு முற்றாக அழிக்கப்பட்டதுடன் ஆறிற்கு மேற்பட்ட இராணுவத்தினர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர். மூவர் படுகாயமடைந்தனர்.

இத்தாக்குதல் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளை இரண்டு சியாமாசெட்டிரக குண்டுவீச்சு விமானங்கள், இரு புக்காரா விமானங்கள் தாக்குதலை மேற்கொண்டன. இத்தாக்குதல் தொடர்ந்து நடைபெறுவதாக தெரிவிக்கப்படுகிறது. சிறிலங்கா அரசதரப்புச் செய்திகள் இத் கடந்த மூன்று நாட்களில் இப் பிரதேசத்தில் விடுதலைப்புலிகள் நடாத்திய இரண்டாவது தாக்குதல் இது என்பது குறிப்பிடத்தக்கது.

இராணுவத்தினர் ... திய பவல் கவசவாகனத்தில் பெருமளவு வெடிப்பொருட்கள் இருந்ததாக சுட்டிக்காட்டியுள்ளது.

## மீனவரை நோக்கி துப்பாக்கி வேட்டு

(நல்லூர்)

நேற்றையதினம் கல்முனைப் பகுதியில் தொழில் செய்து கொண்டிருந்த மீனவர்களை நோக்கி பள்ளிக்குடாவில் நிலை கொண்டிருக்கும் இராணுவம் பலத்த எறிகணை வீச்சுக்களையும் துப்பாக்கி வேட்டுக்களையும் தீர்த்தது இச்சமயம் ஹெலி ஒன்று அவ்விடத்துக்கு வந்து பரா வெளிச்சத்தை ஏவி மீனவர்களை நோக்கி சுட்டதாகவும் இதனால் குருநகர் மீனவர்கள் பலர் தமது மீன்பிடி உபகரணங்களை கடலில் கைவிட்டு வந்துள்ளார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (17)

## இன்று மூடப்பட்டிருக்கும்

இன்று மட்டும் அவசர அனுமதி வழங்கும் செயலகங்களும், அனுமதிக்கான விசாரணைச் செயலகங்களும் தவிர்க்க முடியாத காரணத்தினால் திறக்கப்படமாட்டாது என்பதனை பொதுமக்களுக்கு போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவினர் அறியத்தருகின்றனர்.

# கைப்பற்றப்பட்ட நவீன ஆயுதங்கள்

(வவுனியா)

மணலாறு மாவட்டத்திலுள்ள கப்பிலிவெலி இராணுவ முகாமுக்கு சமீபமாக விடுதலைப் புலிகளும் விசேட துணைப்படை வீரர்களும் இணைந்து இராணுவத்தினர் மீது நடாத்திய தாக்குதலின்போது நவீனரக ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

மேற்படி தாக்குதலின்போது கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:-

ஃ எல் 3 எம். எம். ஜி — 02
ஃ ரி 56-1 ரக துப்பாக்கி — 01
ஃ ரி 56 பட்மொடல் துப்பாக்கி — 01
ஃ எல் 3 ரக ரவை லிங்குடன் — 570
ஃ மொபைல் செற் — 01
ஃ பொறின் குண்டு — 02
ஃ செல்மெற் — 01
ஃ ஏ.கே. கோல்சர் — 02
ஃ செற் கோல்சர் — 01
ஃ ஏ.கே. மகசீன் — 09
ஃ நடுத்தர ரவைகள் — 42

# இரு போராளிகள் வீரச்சாவு

(வவுனியா)

மணலாறு மாவட்டத்தில் நேற்றுக் காலை சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய வெற்றிகரத் தாக்குதலின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் இரு போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

வீரச்சாவடைந்த லெப்டினன்ட் அன்பழகன் / கெனின் (ஜென் அரியநாயகம் அன்ரன் கமல்ரஜ் - ஜெயபுரம் மல்லாவி, கிளிநொச்சி) வீரவேங்கை நாகமணி (மாணிக்கம் கிருஷ்ணமூர்த்தி, பரணி வீதி, சந்தையடி, வட்டக்கச்சி, கிளிநொச்சி) ஆகிய இவ் இரு போராளிகளுக்கும் விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.



லெப். அன்பழகன் (கெனின்)



வீரவேங்கை நாகமணி

# சிறிலங்கா விமானப்படைக்கு மேலும் இரு புக்காரா விமானங்கள்

(கொழும்பு)

சிறிலங்கா விமானப்படைக்கு மேலும் இரு புக்காரா விமானங்களை கொள்வனவு செய்ய சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துவருகிறது. 1992 இல் ஆர்ஜன்ரீனாவில் கொள்வனவு செய்யப்பட்ட இந்தரக விமானங்களில் மூன்று பயன்படுத்தப்பட முடியாத நிலையில் மேலும் புக்காரா விமானங்கள் கொள்வனவு குறித்து சிறிலங்கா பாதுகாப்பு அதிகாரிகள் அதிருப்தியடைந்துள்ளனர் என 'திவயின' செய்தி வெளியிட்டுள்ளது.

1992இல் புக்காரா விமானமொன்று 20 இலட்சம் டொலர் வீதம் கொள்வனவு செய்யப்பட்டது என சொல்லப்படுகிறது.

(6ஆம் பக்கம் பார்க்க)

## 7000 பரல் மண்ணெய் கொழும்பில் ஏற்றப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டுக்கு ''மாகோ'' கப்பலில் சுமார் 7000பரல் மண்ணெண்ணெய் கொழும்புத் துறைமுகத்தில் வைத்து ஏற்றும்பணிகள் நடைபெறுவதாக நேற்று

(6ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## சைனீஸ் உணவு சேவை

மதிய உணவு - மீன் - இறைச்சி, முட்டை, மரக்கறி, சைவ உணவு - புரியாணி, பிறைக்றைஸ், நூடில்ஸ் வகை பார்சல் ஓடர்களுக்கும் நாடவும், கருண்யா சைனீஸ் ஹோட்டல், இல. 166, 1-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். வேம்படி பாடசாலை முன்பாக. (7560)

---

## தேவை

புதிய, பழைய தமிழ் ஆங்கில தட்டச்சு இயந்திரங்கள் உடன் தேவை. தொடர்பு: R. மருதலிங்கம், 8/1, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (7598)

---

## கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு

ஒருகிழமை வளர்ச்சியடைந்த கைவலன் வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. ''மல்லிகாபதி'' சந்தை இழக்கு ஒழுங்கை மானிப்பாய். (7599)

ooooooooooooooooooooooo

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகரசபையின் பொது சுகாதாரப் பகுதியினரின் ஏற்பாட்டில் யாழ் இந்து ஆரம்ப பாடசாலையில் இறுவர்களின் சுகாதாரம் பேணுவது தொடர்பான கருத்தரங்கு நாளை பிற்பகல் நான்கு மணியளவில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதே கருத்தரங்கு நாளை மறுதினம் நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயத்தில் பிற்பகல் நான்கு மணியளவில் நடைபெறவுள்ளது.

## மாதாந்த சொற்பொழிவு

யாழ்ப்பாண சிவகுருநாத குருபீடத்தின் வேதாந்த மடப் பரிபாலன சபையின் மாதாந்த சொற்பொழிவு நாளை மாலை மூன்று மணி அளவில் வேதாந்த மடத்தில்.

# எம்மிடமுள்ள ஆயுதங்கள் நாய், பூனைசுடுவதற்கு அல்ல

- எம். எச். எம். அஷ்ரப்

(கொழும்பு)

நாய், பூனை போன்ற மிருகங்களைச் சுடுவதற்காக எமக்கு ஆயுதம் தரப்படவில்லை எமது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டால் நாம் அவற்றை பயன்படுத்தலாம் இவ்வாறு முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான எம். எச். எம். அஷ்ரப் தெரிவித்தார்.

அண்மையில் பத்திரிகையாளர் மத்தியில் பேசியஅவர்பத்திரிகையாளரின் கேள்வி ஒன்றுக்குப்பதிலளிக்கையில் எம்மிடம் ஆயுதங்கள் இருக்கின்றன ஆனால்அவைசட்டவிரோதமானவை அல்ல. சட்டரீதியானவை அரசே எமது பாதுகாப்பிற்காக ஆயுதங்களையும் அனுமதியையும் தந்துள்ளது. எமது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படுமானால் தற்பாதுகாப்பு கருதி நாம் அவற்றைப் பயன்படுத்துவோம் எனத் தெரிவித்தார்.

அத்துடன் பொத்துவில், அட்டாளைச்சேனை, நிந்தாவூர், கல்முனை, கருங்கொடித்தீவு, சம்மாந்துறை ஆகிய பிரதேச சபைகளில் ஏதேனும் ஒன்றில் முஸ்லிம் காங்கிரஸ் தோற்றாலும் தனது எம். பி. பதவியை துறக்க இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பாதுகாப்புக் கருதி கியூவீதி மூடப்பட்டது

## இரகசிய தகவலையடுத்து நடவடிக்கை

(கொழும்பு)

கொம்பனித் தெருவிலுள்ள உயர் பொலீஸ் அதிகாரிகள் வசிக்கும் பகுதிகளுக்குப் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. கொம்பனித்தெரு கியூ வீதி பகுதியில் பத்துக்கும் மேற்பட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர்களின் வசிப்பிடங்கள் உட்பட பல உயர் பொலிஸ் அதிகாரிகளின் குடியிருப்புகள் இருக்கின்றன. மேலும் பல பொலிஸ் சுப்பிறிண்டன்டுகளும், உதவிப் பொலிஸ் சுப்பிறிண்டன்டுகளும் இப்பகுதியில் வசிக்கின்றனர்.

இராணுவ புலனாய்வு பிரிவிற்கு கிடைத்த சில இரகசியத் தகவல்களை அடுத்து கொம்பனித் தெரு கியூ வீதியில் அப்பகுதியில் குடியிருப்பவர்கள் மட்டுமே போக்குவரத்து செய்ய அனுமதிக்கப்படுகின்றனர். கொம்பனித்தெரு கியூவீதி பொதுமக்கள் பாவனைக்கு மூடப்பட்டு இருக்கின்றது. இவ் வீதியிலேயே கொம்பனித் தெரு கதிர்வேலாயுதசுவாமி கோவில் இருப்பது தெரிந்ததே.

# உணவுச்சாலைகளில் சுகாதார பகுதி சோதனை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை எல்லைக் குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள உணவுச் சாலை மற்றும் தேநீர்ச் சாலைகளில் யாழ். மாநகர சுகாதாரப்பகுதியினர் திடீர் சோதனை நடத்தி வருகின்றனர்.

கடந்தகிழமை தொடக்கம் நகர்ப்புற மற்றும் நகரை அண்டிய பகுதிகளில் அமைந்துள்ள மேற்படி நிலையங்கள் பரிசோதனை இடப்பட்டு வருகின்றன.

இதன் முக்கிய நோக்கம் சுகாதாரமற்ற முறையில் இயங்கும் நிலையங்களைக் கண்டறிந்து சுகாதாரம் பேணுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளச் செய்தல் ஆகும்.

இவ்வாறு சுகாதாரமற்ற முறையில் இயங்கும் நிலையங்களால் நோய்கள் பரவக்கூடிய அபாய நிலை ஏற்படும். எனவே இந் நடவடிக்கையை மாநகர சுகாதாரப் பகுதியினர் மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது.

(பா), (நி)

---

## முதலாம் ஆண்டுவிழா

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு பிரதேச இளைஞர் வள நிலையத்தின் முதலாம் ஆண்டு விழா நாளை வெள்ளிக்கிழமை

## தாச்சிப் போட்டி முடிவு

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி லவனிதா குடியிருப்பு விளையாட்டுக்கழகத்தினரால்அண்மையில் நடாத்தப்பட்ட யாழ். மாவட்ட ரீதியிலான கரபந்தாட்டம், உதைபந்தாட்டம் மற்றும் தீவக கோட்ட ரீதியிலான தாச்சிப்போட்டி ஆகியவற்றின் முடிவுகள்: கரபந்தாட்டப் போட்டியில் மேற்படி குடியிருப்பு விளையாட்டுக் கழக 'ஏ', 'பி' அணிகள் முறையே 1-ம், 2-ம் இடங்களைப் பெற்றன. தாச்சிப் போட்டியில் குடியிருப்பு விளையாட்டுக்கழக 'ஏ' அணி 1-ம் இடத்தையும் வேலணை நேதாஜி விளையாட்டுக்கழக 'ஏ' அணி 2-ம் இடத்தையும் பெற்றன. உதைபந்தாட்டப் போட்டியில் நாவற்குழி விளையாட்டுக்கழக 'ஏ' அணி சம்பியனாகியது. (22)

# அரச சேவை வெற்றிடம் பரீட்சை மூலம் நிரப்பப்படும்

(கொழும்பு)

அரசாங்க சேவையில் இருக்கும் சகல வெற்றிடங்களையும் போட்டிப்பரீட்சை மூலம் நிரப்ப துரித நடவடிக்கை மேற்கொள்ளப் படுவதாக பொது நிருவாக அமைச்சர் வெஸ்டஸ் பெரேரா தெரிவித்துள்ளார்.

தற்போது அரசாங்க சேவையில் நிலவும் வெற்றிடங்கள் தொடர்பான விபரங்களைச்சேகரித்து தனக்கு உடனடியாக சமர்ப்பிக்குமாறும் ஒருங்கிணைப்பு சேவைப்பணிப்பாளருக்கு அமைச்சர் பெரேரா உத்தரவு பிறப்பித்துள்ளார்.

தற்போதுநிலவும்சகல வெற்றிடங்களும் வெகுவிரைவில் போட்டிப் பரீட்சை மூலம் நிரப்பப்படவுள்ளது என்பதுடன் இப்போட்டிப் பரீட்சையில் தேறுவோருக்கு உடன் நியமனங்கள் வழங்கப் படவுள்ளன. மேலும் தகுதி வாய்ந்த ஏனையோரது விண்ணப்பங்கள் சேகரிக்கப்பட்டு எதிர்கால வெற்றிடங்கள் படிப்படியாக நிரப்பபயன் படுத்தப்பட இருப்பதாகவும் தெரியவருகிறது.

## கருத்துரை

யாழ். பல்கலைக் கழக புவியியற் கழகத்தின் கருத்துரை தொடரில் இன்று மாலை 3 மணிக்கு புவியியற்துறை 2 ஆம் இலக்க மண்டபத்தில் அவுஸ்திரேலியாவில் உயர்கல்வி வாய்ப்புகள் என்ற தலைப்பில் கருத்துரை இடம்பெறும். அரசியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ். கே. நாதன் கருத்துரை வழங்குவார்.

# நுண்கலை மன்ற தேர்வுகள் நாளை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வட இலங்கை நுண்கலை மன்றத் தேர்வுகள் யாழ். கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

மேற்படி மன்றத்தின் 1993 ஆம் ஆண்டிற்குரிய தேர்வுகள் நாளை யாழ்ப்பாணம், மருதனாமடம், கோப்பாய், சாவகச்சேரி, நெல்லியடி ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளன.

முதலாம் தரத்திற்கு நாளையும் இரண்டாம், மூன்றாம், நான்காம் தரங்களிற்கு வெள்ளி, சனி ஆகிய இரண்டு தினங்களிலும் நடைபெறும். ஆசிரியர் தரத்திற்கு வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய மூன்று தினங்களிலும் நடைபெறும் என வட இலங்கை நுண்கலை மன்றத் தலைவரும், யாழ். தெற்கு வலய கல்விப் பணிப்பாளருமாகிய செல்வி ரி. பெரியதம்பி தெரிவித்துள்ளார். (பா

# பயிலுநர் ஆசிரியர்க்கான பயிற்சி வகுப்பு ஆயத்தம்

(யாழ்ப்பாணம்)

1994 ஆம் ஆண்டு பயிலுநர் ஆசிரியர்கள் பயிற்சி வகுப்புகளுக்குரிய கல்விச் செயற்பாடுகள் எதிர்வரும் சனிக்கிழமை ஆரம்பமாகின்றன.

யாழ். தெற்கு வலயத்தைச் சேர்ந்த நல்லூர், யாழ் வேலணை, சாவகச்சேரி ஆகிய கோட்டங்களில் இயங்கும் நிலையங்களிற்கு சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் தவறாது சமுகமளித்து தொடர வேண்டிய கற்றல் செயற்பாடுகள் பற்றிய வனத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (பா)

---

# 1-ம் ஆண்டுநினைவலைகள்

தாயின் மடியில்
04-12-1974

வீரச்சாவு
24-02-1993

திதி:
24-02-1994



## லெப்டினன்ட் கடவுள்
(கணேசன் மகாலிங்கம்)

விடியலைத்தேடி விண்மீன் ஆகிவிட்ட
எம் இனிய வீரனே! தாயக
விடுதலைக்காக தன் சுகம்
துறந்தவன் எதிரியை அழிப்பதற்காய்

---

# கைச்சங்கிலி.

சுன்னாகத்தில் இயங்கும் ஒலிம்பியா விவசாய சேவை ஸ்தாபன உரிமையாளர் க. பன்னிருகரன் என்பவரால், தெரு வீதியில் இருந்து பெறுமதிமிக்க தங்கப்பவுண் கைச்சங்கிலி ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. இதைக் கைதவறவிட்டவர்கள் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

**ஒலிம்பியா விவசாய சேவை**
ஸ்ரேசன்றோட், சுன்னாகம்.

(7595)

---

# நினைவு கூருகின்றோம்..
# 1994. 02. 24

1984 ஆம் ஆண்டு இதேதினத்தில் யாழ்-குருநகர்ப் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட சுண்டுக்குளி மகளிர் கல்லூரிமாணவி.

1986ஆம் ஆண்டு மலையகம் - தலவாக்கொல்லையில் சென்-கூம்ஸ் தோட்டத் தமிழ்த் தொழிலாளர்கள் மீது சிறிலங்கா காவல்துறையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட 2 1/2வயது பெண் குழந்தை.

1989ஆம் ஆண்டு வவுனியாவில் தேசவிரோத குழுவினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 03 தமிழிளைஞர்கள்.

கிளி-கணேசபுரத்தில் தேசவிரோதக் குழுவினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 02 தமிழர்கள்.

1991 ஆம் ஆண்டு மட்டு-மகிழடித்தீவுப் பகுதியிற்

மறுஜனம் நாயன்மாா்கட்டு மகேஸ்வரி வித்தியாலயத்தில் பிற்பகல் நான்கு மணியள வில் நடைபெறவுள்ளது.

### மாதாந்த சொற்பொழிவு

யாழ்ப்பாண சிவகுருநாத குருபீடத்தின் வேதாந்த மடப் பரிபாலன சபையின் மாதாந்த சொற்பொழிவு நாளை மாலை மூன்று மணி அளவில் வேதாந்த மடத்தில் நடைபெறவுள்ளது. மாவட்ட நீதிபதி ந. யோகேஸ்வரி காஞ்சிப் பெரியாரின் நூற்றாண்டுகால அருளாட்சி என்னும் தலைப்பில் உரைநிகழ்த்தவுள்ளார்.

### வெளிச்சம் வெளிவந்துள்ளது

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தின் மாதாந்த வெளியீடான 'வெளிச்சம்' கலை, இலக்கிய, சமூக இதழின் மாசிமாத வெளியீடு இன்று வெளிவருகின்றது. இந்த இதழில் தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் வழங்கிய ''சுதந்திரம் இல்லையேல் வாழமுடியாது'' என்ற செய்தியுடன் பிரம்மஞானியின் கட்டுரையும், மாலிகாவின் முன்பக்கக் கவிதையுடன் புதுவை இரத்தினதுரை, இ. திருமாறன், சுபா, தூயவன் தொண்டையூர் துவாரகன் ஆகியோரின் கவிதைகளும், சித்திரன் சிவஞான சுந்தரத்துடன் நேர்காணலும் இடம் பெற்றுள்ளது. மேலும் கேணல் கிட்டுவின் கடிதங்களின் தொகுப்பான ''என் இனியவளுக்கு'' நூலிற்கான வே. பாலகுமாரனின் மதிப்புரையும், இணுவையூர் சிதம்பர திருச் செந்திநாதனின் ''வெட்டுமுகம்'' நூலிற்கான சோ. கிருஷ்ணராசாவின் மதிப்புரையும், ''தோலிகள் ஐந்து'' நூலிற்கான சோ. பத்மநாதனின் மதிப்புரையும் இடம்பெற்றுள்ளது. இன்னும் மணலாறு விஜயன், பொன்னிலா ஆகியோரின் இரு கதைகளும், வளநாடனின் நாடகமும், செ. கிருஸ்ணராசாவின் வரலாற்றுக் கட்டுரையும் இடம்பெற்றுள்ளது. இது 'வெளிச்சம்' சஞ்சிகையின் இருபத்து மூன்றாவது இதழ் என்பது குறிப்பிடத்தக்கது.

... தி வருகின்றனர்.

கடந்தகிழமை தொடக்கம் நகர்ப்புற மற்றும் நகரை அண்டிய பகுதிகளில் அமைந்...

### முதலாம் ஆண்டுவிழா

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு பிரதேச இளைஞர் வள நிலையத்தின் முதலாம் ஆண்டுவிழா நாளை வெள்ளிக்கிழமை பகல் 1.00 மணிக்கு இராமநாதன் கல்லூரி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

### கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

அத்தியாவசிய உணவுப் பொருள்களின் தட்டுப்பாட்டையும் கப்பற் சட்டணத்தினால் ஏற்படும் விலை உயர்வையும் கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்ட பேரணியும், மறியற் போராட்டமும் நடாத்துவது சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் ஒன்று இன்று பிற்பகல் 3-00 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக யாழ். மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தின் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

(22)

### சைவ சித்தாந்த விழா

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் அரசினர் ஆசிரியர் கலாசாலை இந்துமாமன்றத்தின் ஏற்பாட்டில் சைவ சித்தாந்த விழா இன்று காலை ஒன்பது மணிமுதல் பிற்பகல் ஐந்து மணிவரை நடைபெறவுள்ளது. இவ்விழாவில் உரையரங்குகளுடன் நடன அரங்கம், இசையரங்கம், கருத்தரங்கம், வில்லுப்பாட்டு, நாடகம் போன்ற நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளது.

### இல்ல மெய்வல்லுநர் போட்டிகள்

யாழ்ப்பாணம் அரியாலைச் பார்வதி வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று பிற்பகல் இரண்டுமணி முதல் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது. இதில் பிரதம விருந்தினராக நல்லூர் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி. புலேந்திரன் கலந்து கொள்ளவுள்ளார்.

... பேணுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளச் செய்தல் ஆகும்.

இவ்வாறு சுகாதாரமற்ற முறையில் இயங்கும் நிலையங்களால் நோய்கள் பரவக்கூடிய அபாய நிலை ஏற்படும். எனவே இந் நடவடிக்கையை மாநகர சுகாதாரப் பகுதியினர் மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது.

(பா), (நி)

### அப்பியாசப் புத்தகம் அன்பளிப்பு

(குருநகர்)

உழைக்கும் உறுப்பினர்களை இழந்த குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு குருநகர் புனித உத்தரிகமாதா பங்குச் சபையினர் 75 ரூபா பெறுமதியான அப்பியாசப் புத்தகங்களை வழங்கி வருகின்றனர்.

அடுத்த கட்ட நடவடிக்கையாக வறுமைக் கோட்டுக்குள் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கும் மேற்படி உதவி வழங்கப்பட இருப்பதாகவும் சபையைச் சேர்ந்த முத்தையா துரைசிங்கம் தெரிவித்தார். (21)

### சமய விரிவுரை

யாழ் வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் நாவலர் தர்மகர்த்தா சபையின் ஏற்பாட்டில் பௌர்ணமி தோறும் சமய விரிவுரை நடைபெறவுள்ளது. இந்தவரிசையில் நாளை காலை 9-30 மணியளவில் 'நாவலர் வழியின் சைவம்' என்னும் பொருள் பற்றி கலாநிதி ப. கோபாலகிருஸ்ணன் உரை நிகழ்த்தவுள்ளார். இந்நிகழ்ச்சியில் நல்லை ஆதீன முதல்வரின் ஆசியுரையும் இடம் பெறும்.

### வருடாந்த பொதுக் கூட்டம்

மூளாய் சைவ பிரகாசப் வித்தியாலயத்தின் பாடசாலை அபிவிருத்திச் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை பிற்பகல் 2. 30 மணியளவில் வித்தியாலய அதிபர் தலைமையில் வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

திதி:
24-02-1994



## லெப்டினன்ட் கடவுள்
(கணேசன் மகாலிங்கம்)

விடியலைத்தேடி விண்மீன் ஆகிவிட்ட
எம் இனிய வீரனே! தாயக
விடுதலைக்காக தன் சுகம்
துறந்தவன் எதிரியை அழிப்பதற்காய்
தீப்பிழம்பாய் ..........

எமது இல்லத்தில் நடைபெற இருக்கும் ஓராண்டு நினைவு நாளில் சகபோராளிகளையும் நண்பர்களையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

உன் பிரிவால் வாடும்
அண்ணா கிலையடி, அப்பா, அம்மா, சகோதரர்கள்,
கரணவாய் உடுப்பிட்டி (7597) உற்றார், உறவினர்கள்,

## ஆண்டு ஒன்றின் நினைவலைகள்



அமரர்
## சின்னத்தம்பி சபாபதிப்பிள்ளை

(புங்குடுதீவு 12 ஐ பிறப்பிடமாகவும், வேலணை 4 ஐ வசிப்பிடமாகவும் கொண்டவர்)

ஈராறு திங்கள் இங்கு
நீங்கள் இல்லையென
ஓலமிட்டு அழுகின்றோம் உங்கள்
காதில் விழவில்லையோ
விதியோ வருத்தமோ என
விளங்காமல் துடிக்கின்றோம்

உம் பிரிவால் துயருறும்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(கி-8701)

1984 ஆம் ஆண்டு இதேதினத்தில் யாழ்-குருநகர்ப் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட சுண்டுக்குளி மகளிர் கல்லூரிமாணவி.

1986ஆம் ஆண்டு மலையகம் - தலவாக்கொல்லையில் சென்-கூம்ஸ் தோட்டத் தமிழ்த் தொழிலாளர்கள் மீது சிறிலங்கா காவல்துறையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட 2 1/2வயது பெண் குழந்தை.

1989ஆம் ஆண்டு வவுனியாவில் தேசவிரோத குழுவினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 03 தமிழிளைஞர்கள்.

கிளி-கணேசபுரத்தில் தேசவிரோதக் குழுவினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 02 தமிழர்கள்.

1991 ஆம் ஆண்டு மட்டு-மகிழடித்தீவுப் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**நிக்சன் மாஸ்ரர்** (மகிழவெட்டுவான் - மட்டு)

**நேசன்** (ஆரையம்பதி - மட்டு)

**கண்ணதாசன்** (மகிழடித்தீவு - மட்டு)

1993 ஆம் ஆண்டு மன்னார் - நானாட்டான் இராணுவ முகாமிற்கும், கட்டைக்காடு இராணுவ முகாமிற்குமிடையில் அமைந்துள்ள காவலரண்கள்மீதான தகர்ப்பின் போது வீரச்சாவெய்திய,

**லெப். ராஜசேகர்** (கந்தையா தேவராசா கிரான் மட்டு)

**மேஜர் அச்சுதன்** (அந்தோனிமுத்து ஜோன்சன் முருங்கன்பிட்டி மன்னார்)

**கப்டன் பிரவின்ராஜ்** (ஜயசேன ஆரியவென்ச மடுறோட் மன்னார்)

**லெப். மோகன் | பசில்** (திருச்செல்வம் லூக்காஸ் பேசாலை மன்னார்)

**லெப். செங்கோலன்** (சூசை எட்வேட் அடம்பன் மன்னார்)

**2ஆம் லெப். இசையரசன்** (யோகேஸ்வரன் மனேஸ்குமார் பூநகரி மன்னார்)

**காந்தன்** (நீலகண்டன் விஜயகுமார் உயிர்த்தராசன்குளம் மன்னார்)

**பரசுராமன்** (தர்மரட்ணம் தயானந்தன் வாடியடி பூநகரி மன்னார்)

**கார்த்திகேயன்** (செபஸ்ரியான் நெவில்சன் கட்டையடம்பன் மன்னார்)

**லெப். கடவுள்** (க. மகாலிங்கம் அண்ணாகிலையடி, கரவெட்டி யாழ்)

**லெப். திருமேனி** (செல்லையா ஆனந்தீஸ்வரன் கஸ்தூரியார் வீதி யாழ்)

திருமலை மூதூர் பகுதியில் சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் பலியான மூதூர் உப்பூரைச் சேர்ந்த இனம் மீனவர்-

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-8689)

## வழங்கப்பட்டன

(யாழ்ப்பாணம்)

வன்னி மாவட்டம் கிளிநொச்சிக் கோட்டத்தில் வறுமைக் கோட்டின்கீழ் வாழும் இருபத்துநான்கு குடும்பங்களுக்கு நல்லின ஆடுகள் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ளன.

பால் உற்பத்தியை ஊக்குவிக்கும் பொருட்டு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன கிராமிய உற்பத்திக் குழு மூலம் வழங்கப்பட்டுள்ளது.

## பா.உ க்களுக்கு ஒய்வூதியம்

சிறிலங்கா பாராளுமன்ற உறுப்பினர் ஒய்வூதியத்திற்கான கொண்டுவரப்பட்ட திருத்த சட்டம் விரைவில் ஏற்படவுள்ளஅரசாங்க மாற்றத்திற்கான ஒரு முன்னோடி நடவடிக்கையென எல்.மொ: பெனாண்டோ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் உறுப்பினராக ஐந்து ஆண்டுக்கு பதவி வகித்தால் மட்டுமே இதுவரை ஒய்வூதியம் வழங்கப்பட்டு வந்தது. இதனை தற்போது நான்கு ஆண்டுகள் உறுப்பினர் பதவி வகித்தால் ஒய்வூதியம் வழங்க முடியும் என்ற சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

அநுரா பண்டாரநாயக்காவுக்கு உறுப்பினர் பதவி வழங்குதல் தொடர்பாக தேசிய பட்டியலில் ஐந்து ஆண்டு முடிவதற்கு முன்னர் பதவி துறந்த உறுப்பினருக்கும், தற்போதுகாமினிதிசாநாயக்கா, ஒஸி. அபேகுணசேகர, சனக அமரதுங்கா, றொனி டிமெல் மற்றும் பலருக்கு தேசிய பட்டியல் உறுப்பினர் பதவி வழங்குவதற்காக தற்போது தேசிய பட்டியலில் உள்ள உறுப்பினர்களை வெளியேற்ற அரசாங்கம் மேற்கொள்ளும் முயற்சி இதுவென அவர் மேலும் தெரிவித்தார்.



ஓராம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
15.5.1975

வீரச்சாவு
7.3.1993

கடற்புலி

### வீரவேங்கை ஈசன்

(செல்வராசா சிவனேசன்)

ஈழமண்ணிலே வித்தான ஈசனே
பாசமிகு தந்தை தாய் கூடப்பிறந்தவர்கள்
கதறி அழுதிட
உன் சகோதரர் இருவர் உன்பாதை நடந்து வர
உற்ற சிநேகிதரும் சுற்றமும் கண்ணீர் விட்டழ
எம்மை விட்டு மண்ணுக்காய் இன்னுயிர்
ஈந்தவனே

உன் ஆத்மா சாந்திக்கு எங்களது அஞ்சலிகள்.

24-2-94 வியாழக்கிழமை இன்று எமது இல்லத்தில் நடைபெறும் ஓராம் ஆண்டு நினைவு மதிய உணவு நிகழ்விலும் போராளிகள், உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகியோரை கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நினைவுகளுடன்
- குடும்பத்தினர்.

தனங்கிளப்பு,
சாவகச்சேரி.

(7590)

6·ம் ஆண்டு நினைவஞ்சலி

## கைத்தொழில் அபிவிருத்தி குழுவின் ஒன்று கூடல்

கைத்தொழில் அபிவிருத்திக் குழுவின் முதலாவது ஒன்று கூடல் ஒன்று சமீபத்தில் யாழ் பல்கலைக்கழக விவசாய பீடத்தில் கலாநிதி நவரத்தினராசா தலைமையில் நடைபெற்றது.

அந்த ஒன்று கூடலின்போது விவசாய செய்கைக்கான பண்படுத்தலிலிருந்து விளைவை முடிவுப் பொருளாக மாற்றத் தேவையான உபகரணங்கள் தொடர்பாக ஆராயப்பட்டது.

ஆமணக்கு, சூரியகாந்தி, சோயா, நார்ப்பயிர்கள், பருத்தி போன்றவற்றைக் கொண்டு கைத்தொழில்களை எவ்வாறு மேம்படுத்துவது என்றும் மேற்படி ஒன்று கூடலில் ஆராயப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## பெறுபேறுகளின் சான்றிதழ் வந்துள்ளது

(பருத்தித்துறை)

1980, 1981-ம் ஆண்டுகளில் நடைபெற்ற க. பொ. த. (சா/த) பரீட்சைப் பெறுபேறுகளின் சான்றிதழ்களும், 1981, 1987, 1988-ம் ஆண்டுகளில் நடைபெற்ற க.பொ. த. (உ/த) பரீட்சைப் பெறுபேறுகளின் சான்றிதழ்களும் பரீட்சைத் திணைக்களத்தால் பாடசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், இச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ள வேண்டிய மாணவிகள் பாடசாலை நாட்களில் கல்லூரி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாமென்றும்,

# சுயநலத்திற்காக சமூகநலனை கவனத்திற்கு எடுக்க தவறினர்

### அமைச்சர் தொண்டமான் குற்றச்சாட்டு

(கொழும்பு)

சுயநலன்களுக்காக சமுதாய நலத்தைக் கவனத்திற் கொள்ளாது செயற்பட்டு வரும் சிலரால் தான் பெரும்பான்மையினரை மரமாகவும் சிறுபான்மையினரை மரங்களில் படரும் கொடியாகவும் சிறு செடியாகவும் பேசும் சந்தர்ப்பம் ஏற்பட்டு உள்ளது இவ்வாறு அமைச்சர் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

ரங்கல நகரில் பெரும் மழைக்கு மத்தியிலும், 'மலையக தந்தையே நூறாண்டு காலம் வாழ்க' 'மலையக காந்தியே அமைச்சர் தொண்டமானே நீடூழி வாழ்க' என்ற பதாகைகளுடன் பெரும் திரளான மக்களால் வரவேற்கப்பட்ட அமைச்சர் அங்கு பொதுக் கூட்டத்தில் உரை நிகழ்த்துகையில் மேலும் கூறியதாவது:

கடந்த மாகாண சபை தேர்தலின் போது நமக்கு எதிராக செயற்பட்டவரும், எம்மால் தோற்கடிக்கப்பட்டவருமான காமினிதிசாநாயக்காவை நான் அழைத்து மத்திய மாகாணசபை முதல்வருக்கு எதிராக நம்பிக்கை இல்லாப் பிரேரணை ஒன்றை சமர்ப்பிக்குமாறு நான் கூறிய போது எமது மக்களின் நிலைப்பாட்டை நன்கு உணர்ந்த அவர் அதற்கு இணங்கினார். ஆனால் எமது மக்களால் தெரிவான எட்டுப்பேர் இ. தொ.காவிற்கு கட்டுப்படாது செயற்பட்டுவிட்டனர். சமுதாயத்திற்கு எதிராக செயல்படுபவர்கள் தண்டிக்கப்படுவதன் மூலமே எதிர்காலத்தில் சமுதாயத்தில் பற்று மிக்கவர்களை உருவாக்க முடியும்.

எமது வளர்ச்சியைப்பொறுக்க முடியாத சிலரும், 83 வன்செயல் மீண்டும் வராதா என்று ஏங்குவோர் சிலரும், எமது உரிமைகளையும், சலுகைகளையும் பறித்தெடுக்க முயலும் சிலரும் இணைந்து ஹெல உறுமய என்ற அமைப்பை உருவாக்கி எமக்கு எதிராக செயற்பட்டு வருகின்றனர். ஏனைய சமுதாயத்திற்கு சரிசமமாக நாம் வாழ்வதை பொறுக்க முடியாத சிலரே இவ்வாறு செய்கின்றனர். பிறந்த அன்றே இறப்பு நிச்சயம். இதனால் அவர்களது அச்சுறுத்தலுக்கோ அதிகாரத்திற்கோ நாம் பயப்படக்கூடாது. நாம் எப்போதும் மரியாதையுடன் வாழ்ந்து இந்நாட்டிலேயே சாவோம் என உறுதி கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

### உவர் மண் தடுப்பு அமைக்கப்பட்டது

முல்லை மாவட்டத்தில் செம்மலைப் பகுதியில் கடல் நீரேரியிலிருந்து கிராமத்திற்குள் உவர் மண் வராது தடுப்பதற்கான உவர் நீர் தடுப்பு அமைக்கப்பட்டுள்ளது.

ஏறத்தாழ இரண்டு மைல் நீளத்திற்கு இத் தடுப்பு அணை அமைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட கரையோரப் பகுதியில் பனம் விதைகள் நடுகை செய்யப்பட்டும் வருகின்றது.

## கௌதாரிமுனையிலிருந்து பரா வெளிச்சம் ஏவல்

(தென்மராட்சி)

பூநகரி கடற் பரப்பில் இரவு வேளைகளில் வெட்டுக்காடு, கௌதாரி முனைப்பகுதிகளில் இருந்துபரா வெளிச்சம் பாய்ச்சப்படுவதாக மீன்பிடிப்பதற்காக கடலுக்குச் சென்ற மீனவர்கள் தெரிவித்தனர்.

கடந்த ஐந்து நாட்களாக கிளாலிக்கடற்பரப்பில் இருந்து சென்ற மீனவர்கள் மேலும் தூர இடத்திற்குச் சென்று தமது தொழிலைச் செய்ய முடியாமல் திரும்பியுள்ளனர். இரவு 9 மணிக்குப் பின்னர் அப்பகுதியில் இருந்து வெளிச்சம் இடையிடை கடற் பிரதேசத்தினை நோக்கி பாய்ச்சப்படுகிறது மீனவர்கள் கடற்படையினர் தாக்கக் கூடும் என்ற அச்சத்தினால் திரும்பி வருகின்றனர். இதனால் மீன் பிடிப்பதில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக தொழிலாளர்கள் கூறினார்.

## சித்தியடைந்த மாணவர்க்கு வேலணை ப.நோ கூ. பரிசு

(யாழ்ப்பாணம்)

கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரிற்கான பிரியாவிடை வைபவமும் மாணவர்களிற்கான பாராட்டு வைபவமும் நேற்று முன்தினம் வேலணை ப. நோ. கூ. சங்க தலைமை அலுவலகத்தில் நாதன் அவர்களிற்கு பிரியாவிடைவைபவமும்மண்டைதீவு மகாவித்தியாலயத்தில் இருந்து பல்கலைக் கழகத்திற்கு தெரிவாகிய மாணவர்களிற்கும் வேலணைப் பிரதேசத்தில் இருந்து ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில்

பேராதனை பல்கலைக்கழக

## வெளிவாரிப் பட்டப்பரீட்சை யாழ்ப்பாணத்தில்நடத்தவும்

### துணைவேந்தர் கோரிக்கை

(கொழும்பு)

பேராதனைப் பல்கலைக் கழகத்தின் வெளிவாரிப்பட்டப் பரீட்சையை யாழ்ப்பாணத்திலும் நடத்துமாறுயாழ் பல்கலைக்கழக உபவேந்தரும் மானிய ஆணைக்குழு உறுப்பினருமான பேராசிரியர் அ. துரைராசா கோரிக்கை விடுத்துள்ளார்.

மானிய ஆணைக்குழுவிற்கு அவர் இது தொடர்பாக எழுதியுள்ள கடிதமொன்றில் மேலும் குறிப்பிடுகையில்; யாழ்ப்பாண மாணவர்கள் பேராதனைக்குச்சென்று பரீட்சை எடுப்பதில் நிலவும் போக்குவரத்து கஷ்டங்களையும் சுட்டிகாட்டியுள்ளார்.

### கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

(தொல்புரம்)

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையினரால் மானிப்பாய்ஆனைக்கோட்டை பகுதிகளின் வீதிகளில் கட்டாக்காலிகளாக சுற்றித்திரிந்த நாய்கள் பிடித்து அழிக்கப்பட்டன.

நீண்ட காலமாக இப் பகுதிகளில் நிலவிவந்த கட்டாக்காலி நாய்களின் தொல்லை இல்லாதொழிக்கப்பட்டுள்ளன விசர்நாய் கடிப்பதால் மக்கள்மரணத்திற்குள்ளாகாமலும், சுத்தம் சுகாதாரங்களைப் பேணவும் மேற்கொள்ளப்பட்ட இத்துரித நடவடிக்கையின் பயனாக 312 நாய்கள் பிடிபட்டன. இந் நாய்களைப் பிடிப்பதற்காக யாழ். மாநகர சபையின் தொழிலாளர்களின் உதவியுடன் பிரதேச சபை ஊழியர்களும் இணைந்து செயல்பட்டு இப் பணியினை மேற்கொண்டனர் என தெரியவருகிறது. (41)

### கண்காட்சி நீடிப்பு

கைதடி சித்த மருத்துவ துறையில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் கண்காட்சி பல மாணவர்களினதும் பொதுமக்களினதும் வேண்டுகோளுக்கு இணங்க இன்றும், நாளையும் நீடிக்கப்பட்டுள்ளது. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கும், பொது மக்களிற்கும் மிகவும் உபயோகமான அம்சங்களைக் கொண்ட இக் கண்காட்சியில் உடலமைப்பியல், உடற்றொழிலியல் அமைப்புகளோடு மூலிகைகளும், இன்றைய போர்க்கால சூழ்நிலையில் இயற்கை மூலிகை உற்பத்திகள் மூலம் தயாரிக்கப்பட்ட சித்த மருந்துகளும் இடம்பெறுவது மிகவும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

முதலாவது பிறந்த நாள்

சந்தவனே

உன் ஆத்மா சாந்திக்கு எங்களது அஞ்சலிகள்.

24-2-94 வியாழக்கிழமை இன்று எமது இல்லத்தில் நடைபெறும் ஒராம் ஆண்டு நினைவு மதிய உணவு நிகழ்விலும் போராளிகள், உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகியோரை கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நினைவுகளுடன்
- குடும்பத்தினர்.

தனங்கிளப்பு,
சாவகச்சேரி.
(7590)

## 6-ம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் ஏ. தியாகராஜா
(சுமதி பொற்தொழிற்சாலை உரிமையாளர்)

பிறப்பு: 12-01-1932 — இறப்பு: 29-02-1988

திதி: 24-02-1994

எங்கள் அன்புத்தந்தையே!
உங்கள் மறைவாலே இதயம் கனக்கிறது
அன்பால் அரவணைத்து கண்ணாக காத்தீர்கள்
அந்நாள் நினைவுகளோ எமைவிட்டு நீங்காது
சொல்லவொரு வார்த்தையில்லை சொல்லியழுது விட்டால்
நம் துயரம் தான் மாறிடுமோ தந்தையே!
உங்கள்ஆத்மா சாந்திக்காக இறைவனை பிரார்த்திக்கும்.

மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள், உற்றார்,
உறவினர்கள், நண்பர்கள்.

'கலைஅரசி' இல்லம்
மீசாலை, (7584)

## வந்துள்ளது

(பருத்தித்துறை)

1980, 1981-ம் ஆண்டுகளில் நடைபெற்ற க. பொ. த. (சா/த) பரீட்சைப் பெறுபேறுகளின் சான்றிதழ்களும், 1981, 1987, 1988-ம் ஆண்டுகளில் நடைபெற்ற க.பொ. த. (உ/த) பரீட்சைப் பெறுபேறுகளின் சான்றிதழ்களும் பரீட்சைத் திணைக்களத்தால் பாடசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், இச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ள வேண்டிய மாணவிகள் பாடசாலை நாட்களில் கல்லூரி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாமென்றும், பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரி அதிபர் அறிவித்திருக்கின்றார். (25)

கடந்த ஐந்து நாட்களாக கிளாலிக்கடற்பரப்பில் இருந்து சென்ற மீனவர்கள் மேலும் தூர இடத்திற்குச் ... திரும்பி வருகின்றனர். இதனால் மீன் பிடிப்பதில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக தொழிலாளர்கள் கூறினார்.

## சித்தியடைந்த மாணவர்க்கு வேலணை ப.நோ கூ. பரிசு

(யாழ்ப்பாணம்)

கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரிற்கான பிரியாவிடை வைபவமும் மாணவர்களிற்கான பாராட்டு வைபவமும் நேற்று முன் தினம் வேலணை ப. நோ. கூ. சங்க தலைமை அலுவலகத்தில் இடம் பெற்றது.

யாழ். மாவட்டத்தில் இருந்து மாற்றலாகிச் செல்லும் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. செ. லிங்கநாதன் அவர்களிற்கு பிரியாவிடைவைபவமும்மண்டைதீவு மகாவித்தியாலயத்தில் இருந்து பல்கலைக் கழகத்திற்கு தெரிவாகிய மாணவர்களிற்கும் வேலணைப் பிரதேசத்தில் இருந்து ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி எய்திய மாணவர்களிற்கும் பாராட்டு வைபவமும் மதிய போசன விருந்துபசாரமும் நேற்று முன் தினம் நடைபெற்றது.

மேற்படி விழா வேலணை ப. நோ. கூ. சங்கமும் அதன் ஊழியர்களும் இணைந்து நேற்று முன் தினம் அதன் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. இந்த வைபவத்தில் பல்கலைக் கழகத்திற்குத் தெரிவாகிய மாணவர்கள் இருவரிற்கும் தலா 2500 ரூபா வீதமும் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி எய்திய மாணவர்கள் ஐவருக்கும் தலா 1500 ரூபா வீதமும் மேற்படி சங்கம் வழங்கி அவர்களது கல்வியை ஊக்குவித்தது மேற்படி வைபவத்தில் தீவக அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் செம்மணன், யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை, புங்குடுதீவு, நயினாதீவு ப. நோ. கூ. சங்கங்களின் தலைவர்கள் மற்றும் யாழ். மாவட்ட கூட்டுறவு சபை தலைவர், செயலாளர் மேற்படி சங்கத்தின் கிளைக் குழுக்களின் தலைவர், செயலாளர்கள், ஊழியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் கலந்து கொண்டனர். (88)

... கடிப்பதால் மக்கள்மரணத்திற்குள்ளாகாமலும், சுத்தம் சுகாதாரங்களைப் பேணவும் மேற்கொள்ளப்பட்ட இத் துரித நடவடிக்கையின் பயனாக 312 நாய்கள் பிடிபட்டன. இந் நாய்களைப் பிடிப்பதற்காக யாழ். மாநகர சபையின் தொழிலாளர்களின் உதவியுடன் பிரதேச சபை ஊழியர்களும் இணைந்து செயல்பட்டு இப் பணியினை மேற்கொண்டனர் என தெரியவருகிறது. (41)

... பட்டுள்ளது. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கும், பொது மக்களிற்கும் மிகவும் உபயோகமான அம்சங்களைக் கொண்ட இக் கண்காட்சியில் உடலமைப்பியல், உடற்றொழிலியல் அமைப்புகளோடு மூலிகைகளும், இன்றைய போர்க்கால சூழ்நிலையில் இயற்கை மூலிகை கூற்பத்திகள் மூலம் தயாரிக்கப்பட்ட சித்த மருந்துகளும் இடம்பெறுவது மிகவும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

## போதைவஸ்து தொடர்பாக தமிழ் இளைஞர் கைது

(கொழும்பு)

பல கொலை, கொள்ளை, போதைவஸ்து தொடர்பாக தேடப்பட்டுவந்த சுரேந்திரன் என்ற தமிழ் இளைஞரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இவர் மருதானை, மாளிகாவத்தை பகுதிக்கு போதை வஸ்து விநியோகம் செய்து வருவதாகவும், புறக்கோட்டை பகுதியில் நடந்த கொலைகளுக்கு இவர் தொடர்புகள் இருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதே வேளை இவரின் விடுதலை தொடர்பாக மலையக தொழில் சங்கத்தின்முக்கியஸ்தரும் இராஜாங்க அமைச்சர் ஒருவரும் தீவிரமுயற்சி செய்து வருவதாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்துள்ளது.

## மா கொள்வனவில் சங்கங்கள் பின்னடிப்பு

(யாழ்ப்பாணம்)

கப்பலில் ஏற்றிவரப்பட்டுள்ள மாவின் கொள்வனவுக் கட்டளையை பெரும்பான்மையான சங்கங்கள் பெற்றுக் கொள்ளவில்லை என்றும் விலை உயர்த்தப்பட்டதற்கான எதிர்ப்புக்கள் மக்கள் மத்தியிலிருந்தும் வெகுஜன அமைப்புக்கள் மத்தியிலிருந்தும் தோன்றலாம் என்றும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் கருதுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது.

ரூபா16.75 க்கு கொள்வனவு செய்யப்படும் மாவின் விற்பனை விலையை சங்கமே தீர்மானிக்க வேண்டும் என்று புனர்வாழ்வுப் பிரிவு பணித்திருக்கின்ற வேளையில் கப்பற் கட்டணத்துடன் சேர்த்து மாவை விநியோகம் செய்வதற்கு சங்கங்கள் பின்னடிக்கின்றன எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதே சமயம், ஏற்கனவே கையிருப்பில் உள்ள மாவை சங்கங்கள் பழைய விலைக்கே விநியோகம் செய்கின்றன. இதேமாதிரி சங்கங்கள் நடத்துகின்ற பேக்கரிகளில் பாண் பழைய விலைக்கே விற்பனை செய்யப்படுகின்றது.

குறிப்பாக கந்தவேலி-நெல்லியடி சங்க பேக்கரியில் பாண் 7.50 விலைக்கே விற்பனை செய்யப்படுகிறது.

இந்த நிலையில் மாவை அதிக விலைக்கு விற்பனை செய்வதில் ஏற்படும் சிக்கல்களை உணர்ந்து கப்பலில் ஏற்றிவரப்பட்டுள்ள மாவை கொள்வனவு செய்வதற்குச் சங்க நிர்வாகம் பின்னடிக்கிறது.

கொள்வனவுசெய்தமாவை வைத்துக்கொண்டு சில சங்கங்கள் திண்டாடுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## இ. தொ. கா. பிளவுபடாது

(கொழும்பு)

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஒருபோதும் பிளவுபடாது. காங்கிரஸ் பலம் பெறுவதற்கு எனது திறமை அல்ல; உங்கள் ஒற்றுமையே அவசியம் எனக்கூறி வந்துள்ளேன்.

இவ்வாறு, இ. தொ. கா. தலைவர் திரு. தொண்டமான் வெள்ளிக்கிழமை மாலை கொழும்பில் நடைபெற்ற அமைப்பாளர் கூட்டத்தில் தெரிவித்தார்.

## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து

24 - 02 - 94



### செல்வன் பிரதாப்

ஆதிகோவிலடி, வல்வெட்டித்துறையைச் சேர்ந்த திலகேந்திரன் மாலினி தம்பதிகளின் அருந்தவப் புதல்வன் பிரதாப் தனது முதலாவது பிறந்ததினத்தை 24 - 02 - 94 வியாழக்கிழமை (இன்று) தாதாவளை கரணவாயில் உள்ள பெரியம்மா வீட்டில் வெகு விமரிசையாக கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, பூட்டி, அப்பப்பா, கனடாவில் உள்ள பெரியம்மா, அக்கா, சின்னமாமா, டென்மார்க்கில் இருக்கும் பெரியம்மா, அண்ணன் வடிவேலு, அப்பா குடும்பத்தினரும், ஜேர்மனியில் இருக்கும் யோகரத்தினம் அப்பா குடும்பத்தினரும், கரணவாயில் உள்ள பெரியம்மாவும், குட்டிசித்தியும், ஆதிகோவிலடியில் உள்ள சித்தப்பாவும் பெரியமாமா குடும்பத்தினரும், நீருவிலில் வசிக்கும் (B)பாங்கப்பா குடும்பத்தினரும், தொண்டமனாற்றில் வசிக்கும் அரியம் அப்பா குடும்பத்தினரும், உற்றார் உறவினரும் பிரதாப்வைபல்கலைகளையும் கற்றுப்பல்லாண்டுகாலம் ஆதிவைரவர் அருள்பெற்று நீடூழி வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

(7582)

# உறவினர் என்பதாலேயே
# கொள்ளி வைக்க துடிக்கின்றனர்

## -கருணாநிதி கிண்டல்

(சென்னை)

உறவின் முறையினர் தான் கொள்ளி வைப்பார்கள். அவர்கள் நமக்கு உறவினர்கள் என்பதால் தான் எனது உருவத்திற்கு கொள்ளி வைத்திருக்கிறார்கள். எனவே அதைப்பற்றி யாரும் வருத்தப்படத்தேவையில்லை என்று தி.மு.க தலைவர் மு கருணாநிதி கூறியுள்ளார்.

திருச்சி மாவட்டம் சரூரில் தி.மு.கவின் பொதுக் கூட்டத்தில் பேசிய அவர் மேலும் கூறுகையில் இங்கு உரையாற்றிய பரமத்திசண்முகம், என்னுடைய உருவத்தைக் கொண்ட கொடும்பாவி எரிக்கப்பட்டதை கண்டும் எதுவும் செய்யாமல் இருந்து விட்டமைக்காக மன்னிப்புக் கேட்டார், அவருக்கு ஒன்றை சொல்லிக் கொள்ள கடமைப்பட்டுள்ளேன். யாரோ என் கொடும்பாவியை எரித்துவிடவில்லை. அ.தி.மு.க காரர்கள் எரித்துவிடவில்லை. காங்கிரஸ் காரர்கள் எரித்துவிடவில்லை நம்மைச் சேர்ந்தவர்கள் தான் எரித்துள்ளனர். அதற்காக நான் வருத்தப்படவில்லை

இருள் இருக்கும் இடத்தில் ஒளி தேவை. அதற்காக அவர்கள் கொடும்பாவியை கொளுத்தி உள்ளனர். இருளை நீக்கி ஒளியை கொண்டுவரத்தானே இந்த ஏற்பாடு. கொள்ளிவைக்கத் துடிக்கும் உறவினர்களின் இடையூறுகளுக்கு செவிசாய்க்காதே நாங்கள் உனக்கு உறுதுணையாக இருப்போம் என்பது போல மக்களின் வரவேற்பு இருக்கிறது. கழகத்திற்குளத்தனை சோதனை வந்தாலும் நாம் வீழ்ந்து விடப் போவது இல்லை, சிலருக்கு நோய் வரும். நோய் வந்த பிறகு உடல் பெருக்கும். அது போல் தி.மு.கவும் சோதனை மேல் சோதனை வந்தாலும் தாங்கும்சேதாரம் இல்லாமல்அழகான நகைசெய்ய முடியாது அந்த இடத்தில் தி.மு.கவை பொறுத்தவரை தற்சமயம் ஏற்பட்டுள்ளது சிறு சேதாரம் தான் எத்தனை விபீடணர்கள் தோன்றினாலும் தி.மு.கவை அழித்துவிட முடியாது என் உயிர் உள்ளவரை தமிழர்களுக்காகவே உழைத்து உயிர்விடுவேன் எனவும் தெரிவித்தார்


**வாரிவளவு நல்லியக்கச்சபை**

காரைநகர்

காரைநகர் மாணவர்களுக்கான

**கல்வி ஊக்குவிப்பு**

**பரிசில் வழங்கும் நிகழ்வுகள் - 1994**

(சித்திரை தமிழ் புத்தாண்டு)

இந்நிகழ்வு பற்றிய மேலதிக விபரங்களுக்கு 1994-02-27 ஈழநாடு நாளிதழைப் பார்க்கவும்.

(7592) செயலர்.



**இலங்கை இளங்கலைஞர் மன்றத்தின்**

# 14-வது இசை விழா

**13-ம் நாள் 24-2-94**

**வியாழக்கிழமை**

**யாழ். நியூ ஹப்பி ரெக்ஸ்ற் ஆதரவில்**

மாலை

4.00 - 5.00 மங்கள இசை

சரவை சே; துரைராஜா குழுவினர்

5.00 - 5.15 பாட்டு

எவி; உதயராணி — பி. சௌதமி )
எவி; ஜெயாராணி — எஸ். ஜனாதினி )
எவி. தமிழ்ச்செல்வி — எஸ். பவதாரிணி ) பாட்டு
பி. தர்ஷிகா — எஸ். லுஷாந்தி )
எவி. ரஜனி — ரி. சிவாஜினி )
எவி. ஸ்ரீகாயத்திரி

சுகிர்தா - வயலின்
ஜூட்ஜெமில்ராஜ் - மிருதங்கம்

5.15 - 5.35 வீணை இசை


# இந்தியாவும் ரஷ்யாவும் கூட்டு கடற்படை ஒத்திகை

(டில்லி)

இந்திய யுத்தக்கப்பல்களும் ரஷ்ய யுத்தக் கப்பல்களும் கடந்த 14ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரை பம்பாய்க்கு அப்பாலுள்ள அரேபியக் கடற்பரப்பில் கூட்டு ஒத்திகை ஒன்றை நடத்தியுள்ளது.

இந்தக் கடற்படை ஒத்திகையில் ரஷ்யாவின் மூன்று யுத்தக் கப்பல்களும் மற்றும் நீர்மூழ்கி எதிர்ப்பு நாசகாரி தரையிறங்கும் கப்பல் மற்றும் டாங்கி என்பனவும், இந்தியாவின் இரண்டு கடற்படை யுத்தக் கப்பல்கள் மற்றும் பல நோக்கு நாசகாரி, ஏவுகணை நாசகாரி என்பனவும் கலந்து கொண்டன.

ரஷ்யா தனி ஆட்சிமாநிலங்களாகப் பிளவுபட்ட பின்னர் இரு நாடுகளும் கூட்டாக நடத்திய முதலாவது கடற்படை இராணுவ ஒத்திகை இது என்பது குறிப்பிடத்தக்கது.

இஸ்லாமாபாத் ஆப்கான்- தூதுவரகத்தில்

# கமாண்டோ படையினரால் பணயக்கைதிகள் விடுவிப்பு

(இஸ்லாமாபாத்)

இஸ்லாமாபாத்திலுள்ள ஆப்கான் தூதுவரகத்திலுள் திடீரெனப் புகுந்த பாகிஸ்தானிய கமாண்டோப் படையினர் அங்கிருந்த துப்பாக்கி ஆட்களைச் சுட்டுக்கொன்றுவிட்டு அவர்களால் தடுத்து வைக்கப்பட்டவர்களில் எஞ்சிய ஆறுபேரையும் விடுவித்துள்ளனர்.

பாகிஸ்தான் உள்துறை அமைச்சின் செயலாளர் இது பற்றி செய்தியாளர்களிடம் தெரிவித்தார். ஞாயிற்றுக்கிழமையன்று பெஷாவரில் 75 மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் சென்று கொண்டிருந்த பாடசாலை பஸ் ஒன்று ஆப்கான் துப்பாக்கி ஆட்களால் கடத்தப்பட்டு ஆப்கான் தூதுவரகத்தில் பணயக்கைதிகளாக தடுத்து வைக்கப்பட்டதும், அவர்களில் அநேகர் பின்னர் கட்டம் கட்டமாக விடுவிக்கப்பட்டதும் தெரிந்ததே.

# இந்தியாவுடன்வர்த்தகஉறவு பிரிட்டன் பெரும் ஆர்வம்

பிரிட்டன் அமைச்சர் தெரிவிப்பு

# உ.பி. அரசிடம் விளக்கம் கேட்டு உயர்நீதிமன்றம் நோட்டீஸ்

(டில்லி)

பாரதிய ஜனதாக் கட்சித் தலைவர் எல். கே. அத்வானி டாக்டர் முரளி மனோகர் ஜோஷி மற்றும் கல்யாண் சிங் உட்பட ஏழுபேரை லக்னோ சிறைச்சாலையிலிருந்து, மாடர்ன் சிறைச்சாலைக்கும் அங்கிருந்து பின் லக்னோவிற்கும் வேறு இடங்களுக்கும் மாற்றியது ஏன் என்று உத்தர பிரதேச அரசிடம் லக்னோ உயர்நீதிமன்றம் விளக்கம் கேட்டுள்ளது. இது தொடர்பாக உத்தரப் பிரதேச அரசுக்கு நோட்டீசுகள் அனுப்பப்பட்டிருப்பதோடு, இம்மாதம் 28ஆம் திகதிக்குமுன்பாக பதிலளிக்க வேண்டுமெனவும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

சர்ச்சைக்குரிய பாபர்மசூதி வளாகத்தை 1992 டிசம்பர் 6ஆம் திகதியன்று நாசப்படுத்தியமை தொடர்பாக பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருப்பது தெரிந்ததே. இந்த வழக்கு தொடர்பான விசாரணைகள் அடுத்த மாதம் 7ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இந்த தினத்தில் சிவசேனை கட்சித் தலைவர் பால் தாக்கரேயும் ஆஜராக வேண்டுமென நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

# அந்நிய மொழியை கற்கும்ஆர்வம் சகோதர மொழிக்கு இல்லையே

## சு. க. எம். பி. வருத்தம்

(கொழும்பு)

அந்நிய மொழியான ஆங்கிலத்தை தோளில் சுமந்துகொண்டுள்ள நாம் எமது நாட்டின் சகோதர மொழியான தமிழைக் கற்றுக் கொள்வதில் ஆர்வம் செலுத்தாது இருப்பது வேதனைக்குரியதாகும் என கண்டி மாவட்ட சுதந்திரக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் யசரத்ன தென்னக்கோன் கூறியுள்ளார்.

வத்தேகம பகுதியில் நடைபெற்ற வைபவமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில் இம்மொழிகளில் ஆர்வம் கொண்டு கற்றுக்கொள்வோமேயானால் எமது சகோதர மக்களது உணர்வுகள் மற்றும் பிரச்சினைகளை உணர்ந்து அவர்களுக்கு உதவக்கூடிய நிலை உருவாகும். இனம் மதம் பாகுபாடற்ற ஒரு சமூகமாக வாழ வேண்டும் என்ற தத்துவத்தையே புத்த பெருமான் போதித்துள்ளார். அவர் மனித சமுதாயத்தை குல மத பேதங்களால் பிரிக்கவில்லை. என்றும் தெரிவித்தார்.

# அதிகளவு அமைச்சர்கள் இலங்கையிலேயே உள்ளனர்

(கொழும்பு)

முழு உலகத்திலுமே இலங்கையில் தான் அதிகளவில் அமைச்சர்கள் உள்ளனர். மத்திய அரசின் அமைச்சர்களாக எண்பது பேர் இருக்கின்றனர் இவ்வாறு இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார அம்பலாங்கொடையில் நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் உரையாற்றும் போது தெரிவித்தார். அவர் மேலும்கூறுகையில்,

உலகத்தின்மிகக்கூடுதலான சனத்தொகையைக்கொண்ட அல்லது மிகுந்த செல்வந்த நிலையிலுள்ள எந்த ஒரு நாட்டிலும் கூட இவ்வளவு பெரிய எண்ணிக்கையில் அமைச்சர்கள் இல்லை. பிரான்ஸ் மற்றும் இங்கிலாந்து போன்ற நாடுகளில் சாதாரணமாக 20 அமைச்சர்களே இருக்கின்றனர். நூறுகோடி சனத்தொகையுள்ள இந்தியாவில் கூட அண்மைக்காலம் வரை பதினாறுபேரே அமைச்சர்களாக இருந்துள்ளனர்.

இலங்கை போன்ற சின்னஞ்சிறிய நாட்டில் அளவுக்கு அதிகமான எண்ணிக்கையான அமைச்சர்கள் இருப்பதால் கோடிக்கணக்கான பணம் வீண் விரயமாகிறது.

பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பிக்க அரசிடம் பணம் இல்லை. இருக்கின்ற பணத்தையும் வடக்கு-கிழக்கு யுத்தத்திற்கென ஒருபுறத்திலும், ஊழல், வீண்விரயம், செயற்திறன் இன்மை என்பவற்றில் மறு புறத்திலுமாக விரயம்செய்யப்படுகிறது எனத் தெரிவித்தார்.

### கண்டெடுப்பு

ஜெயரத்தினம் கலைச்செல்வி என்பவரது தேசிய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு எமது அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் அலுவலக நேரத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

### மதிப்பீட்டுக் குழு அமைப்பு

யுத்தத்தினாலும் நீண்டகாலபராமரிப்பு இல்லாததாலும் வெள்ள அழிவு போன்ற இயற்கைப் பாதிப்புகளாலும் ஏற்பட்ட உட்கட்டுமான அழிவுகளை மதிப்

# சவுக்கடித்துறை கடலில் கடும் பீரங்கித் தாக்குதல்

(தொல்புரம்)

மாதகல், சுழிபுரம் கடற்பரப்பில் விசைப் படகுகளிலிருந்து சுற்றிவந்த சிறிலங்கா கடற் படையினர் நேற்று முன் தினம் மாலை 5.00 மணியளவில் சுழிபுரம் சவுக்கடித்துறைக் கரையையும், கலிபர் தாக்குதலையும் மேற்கொண்டனர். இச்சம்பவத்தில்மீனவர்கள் தமது தொழிலை கைவிட்டு விட்டு கரைதிரும்பி உயிர்ப் பாதுகாப்பை தேடிக் கொண்டனர். பீரங்கிகள் கடலில் வீழ்ந்து வெடித்ததினால்

மாலை

**4.00 - 5.00 மங்கள இசை**
சரவை கே. துரைராஜா குழுவினர்

**5.00 - 5.15 பாட்டு**
எம். உதயராணி — பி. சௌதமி )
எம். ஜெயாராணி — எஸ். ஜனாதினி )
எம். தமிழ்ச்செல்வி — எஸ். பவதாரிணி ) பாட்டு
பி. தர்மிகா — எஸ். லுஷாந்தி )
எம். ரஜனி — ரி. சிவாஜினி )
எம். ஸ்ரீகாயத்திரி
சுகிர்தா - வயலின்
ஜூட்ஜெமில்ராஜ் - மிருதங்கம்

**5.15 - 5.35 வீணை இசை**
செந்திச்செல்வி செந்தில்நாதன் )
துஷ்யந்தி நிர்மலச்சந்திரன் )
பாலகுமாரி துரைராஜா ) வீணை
ஆண்டாள் இராஜசிங்கம் )
எம். துரைராஜா - மிருதங்கம்

**5.35 - 6.15 பாட்டு**
துளசி அமிரத்தினம் - பாட்டு
ஆர். எஸ். கேசவமூர்த்தி - வயலின்
கே. ஆதவன் - மிருதங்கம்

**6.15 - 7.00 பாட்டு**
கனகாம்பரி பத்மநாதன் - பாட்டு
சாந்தநாயகி - சுப்ரமணியம் - வயலின்
கே. கண்ணதாஸன் - மிருதங்கம்

**7.00 - 7.30 மங்கள விளக்கேற்றல்**
திரு.ச. கற்பகநாதன்
(வெங்கடேஸ்வரா ஸ்ரோர்ஸ்)
திரு. கு. ரவிச்செல்வன், என். யோகநாதன்
(காரைநகர்)
திரு. எம். மனோகரன் (கவேலை)
அருள் உரை:- பிரம்மஸ்ரீ எஸ். சுந்தரேஸ்வரக் குருக்கள்
(பிரதமகுரு பெருமாள் கோயில்)
தலைவர்:- திருமதி இ. இராமநாதன்
(அதிபர் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை)
பிரதம விருந்தினர்:- திருமதி. பி. கணேசலிங்கம்
(பிரதிக்கல்விப்பணிப்பாளர் சாவகச்சேரி)
சிறப்பு விருந்தினர்:- திருமதி ச. ஜெயராஜா
(அதிபர்யாழ் இந்துமகளிர் கல்லூரி)

**7.30 - 8.30 இருவயலின் இசை**
ஆர். ராதாகிருஷ்ணன் ) வயலின்
எஸ். கோபிதாஸ் )
கே. கண்ணதாஸன் - மிருதங்கம்
சதா வேல்மாறன் - கடம்
எஸ். ராஜா - முகர்சிங்

**8.30 - 9.30 பரதநாட்டியம்**
''நாட்டியக் கலா கேந்திரா மாணவிகள்''
தயாரிப்பு:- கிரிஷாந்தி ரவீந்திரா
ரூபினி சேனாதிராஜா

**வாழ்த்துவோர்:**
**சைமன் வர்த்தக நிலையம்**
பலாலி றோட், திருநெல்வேலி.
(இ-8695)

ஆப்கான் தூதுவரகத்தினுள் திடீரெனப் புகுந்த பாகிஸ்தானிய கமாண்டோப் படையினர் அங்கிருந்த துப்பாக்கி ஆட்களைச் சுட்டுக்கொன்று விட்டு அவர்களால் தடுத்து வைக்கப்பட்டவர்களில் எஞ்சிய ஆறுபேரையும் விடுவித்துள்ளனர்.

பாகிஸ்தான் உள்துறை அமைச்சின் செயலாளர் இது

கிழமையன்று பெஷாவரில் 75 மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் சென்று கொண்டிருந்த பாடசாலை பஸ் ஒன்று ஆப்கான் துப்பாக்கி ஆட்களால் கடத்தப்பட்டு ஆப்கான் தூதுவரகத்தில் பணயக்கைதிகளாக தடுத்து வைக்கப்பட்டதும், அவர்களில் அநேகர் பின்னர் கட்டம் கட்டமாக விடுவிக்கப்பட்டதும் தெரிந்ததே.

# இந்தியாவுடன்வர்த்தகஉறவு பிரிட்டன் பெரும் ஆர்வம்

### - பிரிட்டன் அமைச்சர் தெரிவிப்பு

(சென்னை)

இந்தியாவுடனான வர்த்தக உறவுகளை மேலும்வலுப்படுத்த விரும்புவதாக பிரிட்டன் வர்த்தக அமைச்சர் ரிச்சர்ட் நீத்தம் கூறியுள்ளார். இந்தியாவில் நான்கு நாள் சுற்றுப்பயணம் ஒன்றை மேற்கொண்ட அவர் சென்னையில் செய்தியாளர்களிடம் பேசுகையில் இதனைத் தெரிவித்தார்.

இந்தியாவுடன் கூட்டுத் துறையில் தொழில்களைத் தொடங்க பிரிட்டனும் சேர்ந்து ஜப்பானும் முன்வரும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். பிரிட்டனிலுள்ள பெரிபநிறுவனங்கள் இந்தியாவில் தொழில் தொடங்குவது குறித்து பெரும் ஆர்வத்துடன் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

# இஸ்ரேல் பாலஸ்தீனியபேச்சு நம்பகத்தன்மை இழக்கும்

### - யாசீர் அரபாத்

(வஸெளார்)

பாலஸ்தீனிய சுயாட்சி ஒப்பந்தம் அடுத்த ஒரு மாதத்தினுள் பூரணமாக்கப்படாமல் போகுமாயின் இஸ்ரேலுடனான சமாதானப் பேச்சுக்களில் நம்பகத் தன்மையை இழக்கும் ஆபத்து உருவாகலாம், இவ்வாறு பாலஸ்தீனிய விடுதலை இயக்கத் தலைவர் யாசீர் அரபாத் கூறியுள்ளார்.

நெதர்லாந்தில் விஜயம் மேற்கொண்டிருக்கும் அவர் பத்திரிகையாளர்களின் கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையிலேயே இதனைத் தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# அயோத்தி விசாரணை தொடர்ந்து நீடிப்பு

(டில்லி)

பாபர் மசூதி கட்டப்படுவதற்கு முன்னர் அந்த இடத்தில் இந்து ஆலயம் ஒன்று இருந்ததாக அல்லது வேறு எதுவும் மத வழிபாட்டுதலங்கள் இருந்ததா என்பதைக் கண்டறிவதற்கான ஜனாதிபதியால் அமைக்கப்பட்ட ஐந்து உறுப்பினர் குழு தொடர்ந்து பராமரிப்புசெய்யப்பட உள்ளது.

சர்ச்சைக்குட்பட்ட வளாகத்தின் நில உரிமை தொடர்பாக இந்து மற்றும் முஸ்லிம் மத அமைப்புகள் அலகாபாத் நீதிமன்றத்தில் தாக்கல்செய்துள்ள வழக்குகள் அனைத்தையும் உயர்நீதிமன்றத்திற்கு மாற்றும் மனுவொன்றையும் இந்தக் குழு விசாரிக்கவுள்ளது.

## பேச்சு ஆரம்பம்

பாலஸ்தீனியர்களுக்கு தன்னாட்சி வழங்கும் ஒப்பந்த விபரங்களை இறுதியாக்கும் முகமாக கெய்ரோவில் பாலஸ்தீன விடுதலை இயக்கத்திற்கும், இஸ்ரேல் அரசுக்கும் இடையிலான ஒருவார கால பேச்சுவார்த்தைகள் நேற்று முன்தினம் ஆரம்பமாகியது.

முஸ்லிம்களின் புனித மாதமான ரம்ழான் மாதத்தின் இறுதிக்கு முன்பாக ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு விடுமென நம்புவதாகப் பாலஸ்தீனிய தூதுக்குழு தெரிவித்து

அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு எமது அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் அலுவலக நேரத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

## மதிப்பீட்டுக் குழு அமைப்பு

யுத்தத்தினாலும் நீண்டகாலபராமரிப்பு இல்லாததாலும் வெள்ள அழிவு போன்ற இயற்கைப் பாதிப்புகளாலும் ஏற்பட்ட உட்கட்டுமான அழிவுகளை மதிப்பீடு செய்து உடனடி நீண்டகால புனரமைப்பு வேலைகளுக்கு ஏற்ற வகையில் திட்டங்களை மேற்கொள்ளவென செயற்பாட்டுக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தில் 31-01-94 அன்று நடைபெற்ற தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் உட்கட்டுமானப் பகுதியினரால் நடத்தப்பட்ட கலந்துரையாடலின்போதே இச்செயற்பாட்டுக் குழுவானது தெரிவு செய்யப்பட்டது.

பேராசிரியர் வே. நவரத்தினராசா தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் சகல திணைக்கள தலைவர்கள், பிரதேச செயலர்கள், தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

## கருத்தரங்கு

யாழ்ப்பாண பல்கலைக்கழக புவியியற் கழகத்தின் ஏற்பாட்டில் புவியியற் துறை மண்டபத்தில், அவுஸ்திரேலியாவில் உயர்கல்வி வாய்ப்புகள், என்னும் பொருள்பற்றி கலாநிதி ஜெ. கே. நாதன் உரை நிகழ்த்தவுள்ளார்.

## அறிவியலரங்கு

வலிகாமம் தெற்கு பிரதேச சபையும், அதன்கீழுள்ள சன சமூக நிலையங்களின் சமாசமும் இணைந்து நடாத்தும் முழுநிலா நாள் அறிவியலரங்கு நாளை வெள்ளியன்று சுன்னாகம் பெரிய மதவடி பொது நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இவ் அரங்கில் அபிவிருத்திக்கு தொடர்பு சாதனமாக கல்வியின் முக்கியத்துவம் என்னும் விடயம் பற்றி யாழ். பல்கலைக்கழக சிரேஸ்ட விரிவுரையாளர் மா. சின்னத்தம்பி உரை நிகழ்த்தவுள்ளார்.

நிலையிலுள்ள எந்த ஒரு நாட்டிலும் கூட இவ்வளவு பெரிய எண்ணிக்கையில் அமைச்சர்கள் இல்லை. பிரான்ஸ் மற்றும் இங்கிலாந்து புறத்திலும், ஊழல், வீண்விரயம், செயற்திறன் இன்மை என்பவற்றில் மறு புறத்திலுமாக விரயம்செய்யப்படுகிறது எனத் தெரிவித்தார்.

# சவுக்கடித்துறை கடலில் கடும் பீரங்கித் தாக்குதல்

(தொல்புரம்)

மாதகல், சுழிபுரம் கடற்பரப்பில் விசைப் படகுகளில் ரோந்து சுற்றிவந்த சிறிலங்கா கடற் படையினர் நேற்று முன்தினம் மாலை 5.00 மணியளவில் சுழிபுரம் சவுக்கடித்துறைக் கடற்பரப்பில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்களை நோக்கி பீரங்கித் தாக்குதலையும், ஷெல் தாக்குதலையும் மேற்கொண்டனர். இச்சம்பவத்தில் மீனவர்கள் தமது தொழிலை கைவிட்டு விட்டு கரைதிரும்பி உயிர்ப் பாதுகாப்பை தேடிக் கொண்டனர். பீரங்கிகள் கடலில் வீழ்ந்து வெடித்ததினால் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை எனத் தெரியவருகிறது.

அறவழிப் போராட்டக் குழுவின்
16ஆவது சேவை ஆண்டினை
முன்னிட்டு
ஜேர்மன் ஜனநாயகக் குடியரசின்
புனர் வாழ்வுத்திட்டத்தின் கீழ்
அமைக்கப்பட்ட
**அறவழி பயிலகம்**
**திறப்பு விழா**
எப்போது? 25. 02. 1994 வெள்ளி
எந்நேரம்? காலை 10 மணி
எங்கே? கண்டி சாலை, கைதடி நுணாவில்.

**பிரதம விருந்தினர்:**
திரு. ஜோன் குட்கான்ட் அவர்கள்
(மாவட்ட இணைப்பாளர், சிறுவர் பாதுகாப்பு நிதியம்)

**முதன்மை விருந்தினர்:**
திரு. பு. சுந்தரம்பிள்ளை அவர்கள்
(பிரதேசச் செயலர் சாவகச்சேரி)
திரு. சிவநாத் அவர்கள்
(அரசியல் பொறுப்பாளர், தமிழீழ விடுதலைப்புலிகள், தென்மராட்சி)

**சிறப்பு விருந்தினர்:**
டாக்டர். கே. ரீ. சிவபாதம் அவர்கள்
(தலைவர் லயன்ஸ் கழகம், சாவகச்சேரி)
திரு. அ. நல்லதம்பி அவர்கள்
(உபதலைவர் ரீ. ஆர். ஆர். ஓ)
திரு. த. நவரத்தினராசா அவர்கள்
(விசேட ஆணையாளர், நகராட்சி மன்றம் சாவகச்சேரி.)

அன்பர்கள், ஆர்வலர்களை
அன்புடன் அழைக்கின்றோம்.

**-NVDAG-**

அறவழிப் போராட்டக்குழு — க. ஜீவகதாஸ்
29, கைதடி நுணாவில், — செயலாளர்
சாவகச்சேரி. — (7581)

சிந்தனைக்கு

நீ சொல்வதே சரி என நீண்ட நேரம் சாதித்தாலே நீ சொன்னது தவறாகி விடும்.

- யூதப் பழமொழி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 24-02-1994

தொலைபேசி

ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023

தபால் பெட்டி எண் 05


# கைதல்ல, தடுத்துவைப்பு ஒரு புதிய விளக்கம்

சிறிலங்கா அரசதரப்பினருக்கு கற்பனைவளம் சிறிது அதிகம்தான். இதனால் இவர்கள்பிரச்சினைகளுக்குப் புதிய விளக்கங்களும் வியாக்கியானங்களும்செய்வதுண்டு. இந்த வகையிலேயே தற்பொழுது சர்வதேச மன்னிப்புச் சபை கொழும்பில் தமிழர்கள் கைது தொடர்பாக சுமத்திய குற்றச்சாட்டிற்கு புதிய விளக்கம் ஒன்றைக் கொடுக்க முன்வந்துள்ளனர்.

கொழும்பில் ஒவ்வொரு மாதமும் ஆயிரக்கணக்கான தமிழர்கள் கண்டபடி கைது செய்யப்படுவதாகவும், அவர்கள் தமிழ் இனத்தைச் சேர்ந்தவர்கள் என்ற ஒரே காரணத்திற்காகவே கைது செய்யப்படுகின்றனர், சித்திரவதைக்கு உள்ளாகின்றனர் என்பதுவே சர்வதேச மன்னிப்புச்சபை சிறிலங்கா அரசு மீது சுமத்தியுள்ள குற்றச்சாட்டாகும்.

ஆனால், இதற்குப் பதிலளித்துள்ள பிரிட்டனுக்கான சிறிலங்கா தூதுவர் ஜெனரல் சிறில் ரணதுங்கா கொழும்பில் தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்படுவதில்லை; ஒரளவு தமிழ் இளைஞர்கள் சொற்பகாலம் காவலில் வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றனர்; அவர்கள் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்படுவதில்லை; இந்த விடயங்கள் குறித்து விசாரிப்பதற்கு ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது என குற்றச்சாட்டை மறுக்க முற்பட்டுள்ளார்.

அதாவது சர்வதேச மன்னிப்புச் சபையின் குற்றச்சாட்டை மறுக்க முற்பட்ட சிறிலங்காவின் முன்னாள் இராணுவத்தளபதி, கைது செய்யவில்லை, காவலில் வைத்துள்ளோம் எனக்கூறுவது ஒரு வேடிக்கையான அம்சமாகும். அதாவது கைது செய்யாமல் காவலில் வைப்பது எப்படி என்பதை சிறிலங்காவின் முன்னாள் இராணுவத்தளபதியிடமே எவரும் கேட்டுக்கற்றுக் கொள்ள வேண்டும்.

ஆனால் அவரது பதவிக் காலத்தில் கைது செய்யப்பட்டவர்களில் ஆயிரக்கணக்கானோர் காணாமற் போயுள்ள நிலையில் இன்று கைது செய்யப்பட்...

# தென்னாசியாவில் அணுவாயுதப்போர்

# இரு தடவை மயிரிழையில் தவிர்ப்பு!

(நேற்றைய தொடர்ச்சி)

## பாகிஸ்தானுக்கு சீனா உதவி

அணுகுண்டு பெற சீனா பாகிஸ்தானுக்குகருவியானது ரஷ்யா முப்பதாண்டுகளுக்கு முன் சீனாவுக்கு முக்கியமான தொழில் நுட்பம் வடிவமைப்பு தகவல்கள் பயிற்சி என்பவற்றை கொடுத்து அணு விசைப் பொருள்களையும் கொடுத்திருந்தது- இதுபோல் சீனா 1980 இல் பகிஸ்தானுக்குகொடுத்தது- 1966இல் சீனா தனது4ஆவது அணுகுண்டை பரீட்சித்து பார்த்தது- இதே தொழில் நுட்பத்தை சீனா பாகிஸ்தானுக்கு வழங்கியது-

1980 காலப்பகுதி முழுவதும் சீனா பாகிஸ்தானிய விஞ்ஞானிகளையும் தொழில் நுட்பவியலாளர்களையும் நூற்றுக்கணககில் அழைத்து அணு ஆயுத சோதனைகளை நேரில் பார்வையிட்டு பாகிஸ்தான் தேவைக்கேற்ப சோதனைகளை வடிவமைத்துக் கொள்ள சீனா அவர்களுக்கு உதவியது-

அணு ஆயுதத்தை எடுத்துச் சென்று வீசுவதற்கான நடைமுறைகளை உருவாககும் வேலைகளும் நடந்தன- சீனா பாகிஸ்தானுடன் கூட்டாக 25 எம்-11ரக விமானங்களை உருவாக்கி வழங்க இசைந்தது. இதை விட இருநாடுகளும் பாகிஸ்தானில் இரசாயன ஆயுதங்களையும் உயிரியல் ஆயுதங்களையும் ஏவும் வல்லமையுடைய கே-8 போர் விமானங்களையும் கூட்டாக உருவாக்கின.

1976 அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஹென்றி கிஸிங்கர் பாகிஸ்தான் வந்தார். இவரிடம் பாகிஸ்தான் அணுஆயுதத்திட்டம், வெளிநாடுகளில் இருந்து உபகரணங்கள் வாங்கும் யோசனை இவை பற்றிய பல புலனாய்வுத்தகவல்கள், பாகிஸ்தான் எதில் ஆர்வம் கொண்டுள்ளது என்பதை காட்டும் தெளிவான விபரங்கள் என்பன இருந்தன- ... விமானப்படையின் சி-130 விமானங்களும் தொடர்ந்து நிறைய உபகரணங்களை கொண்டு வந்த வண்ணமாக இருந்தன- இவற்றில் பெரும் பாலானவை ஜேர்மனியில் இருந்து கொண்டு வரப்பட்டவை. இதற்கிடையில் அணுகுண்டு தயாரிப்பதற்கான விரைவு வழியாக புளுடோனியத்தை மறுஉற்பத்தி செய்யும் பணி விரைவாக நடந்து வந்தது-

ஆப்கானிஸ்தானில் சோவியத் ஆக்கிரமிப்புநடந்தவுடன் இதன்வேகம்அதிகரித்ததுகிஸிங்கர் விடுத்த எச்சரிக்கைமாயமானது. அமெரிக்காவிற்கு பாகிஸ்தானுடன் நட்பு ஏற்பட்டதும் பாகிஸ்தானின் அணுசக்திசாதனப் இறககுமதியாளர்களுக்கு ஒரே மகிழ்ச்சி. படுவேகத்தில் சட்டவிரோத அணு உபகரண இறக்குமதி நடைபெற்றது. அமெரிக்காவில் 1980 இலும் 1981இலும் இரு சட்டவிரோதஅணுசக்தி சம்பந்தமான ஏற்றுமதிகள் அம்பலமாகின- இதேபோல் ஐரோப்பாவிலும் நடைபெற்றது-

1980ல் கஹூட்டாவில் பாகிஸ்தானின் அணு செறிவூட்டும் ஆலையில் பணி ஆரம்பித்தது இங்குள்ள ஆராய்ச்சி ஆய்வு கூடத்திற்குஇஸ்லாமிய அணுகுண்டின் தந்தை எனக் கூறப்டும் ஏ. கியூ. கான் என்பவரது பெயர் சூட்டப்பட்டது. பிரான்சிலிருந்து பாகிஸ்தானுக்கு கிடைத்திருக்க வேண்டிய புளுடோனிய நுட்பம் கிடைக்காமல் போகவே 1970 இல் கான் நெதர்லாந்தில் திருடிய மையநீக்க முறையை பாகிஸ்தான் பயன்படுத்தி வருவது தெரியவந்தது. பாகிஸ்தானை அணுசக்தி திட்டம் பற்றி கேட்டபோதெல்லாம் அதன் எதிரி இந்தியா கூறிவருவதைப் போல எல்லாம் ''அமைதி நோக்கத்திற்காகவே'' என பாகிஸ்தானும் குறிப்பிட்டது.

1983இல் பென்டகன் ஆய்வறிக்கை பாகிஸ்தானின் உள்நோக்கம் பற்றித் தெளிவாகக் குறிப்பிட்டது. பாகி... வது எனவும் சி-ஐ-ஏ-பணம் வழங்கி உதவுவது எனவும் ஏற்பாடாகியது. ஆயுதங்களைக் கொள்முதல் செய்தது சி-ஐ-ஏயின் இரகசியப் பிரிவு. ஆனால் ஆப்கானிஸ்தானின் உள்ளே ஆயுதமோ பணமோ விநியோகிப்பதில் எந்த அமெரிக்கரும் இறங்காதபடி பார்த்துக் கொள்வது பாகிஸ்தானின் கொள்கை. முஜாகுதீன்களுடன் எந்த அமெரிக்கர்களுக்கும் தொடர்பு கிடையாது. அமெரிக்கர்களின் வரிப் பணத்தை சி-ஐ-ஏ- கொண்டு வந்து முஜாகுதீன்களுக்கு ஊட்டியது. 1984இல் மட்டும் தெரிந்தும் தெரியாமலும் பாகிஸ்தானுக்குக் கொடுக்கப்பட்ட நிதியுதவி100கோடி டொலர். ஆனால் ஆப்கானில் நடந்த இரகசியப் போரிற்கும் ஆயுதத்திற்குமான பாகிஸ்தானின் செலவை அமெரிக்கா மட்டுமல்ல, சவூதி அரேபியாவின் பாத் மன்னரும் வழங்கினார்- மற்றையது தடை செய்யப்பட்ட பி-சி-சி-ஐ வங்கி இது அமெரிக்க, சவூதி நன்கொடைக் கணக்குகளைப் பார்த்ததோடு பாகிஸ்தானின் அணு ஆயுதத் திட்டத்திற்கு முக்கிய நிதி முகவராகவும் இயங்கியது-

1986 இற்குள் பாகிஸ்தானியர்களின் அணு ஆயுதத் திட்டம் அபாயமான பரிமாணத்தை அடைந்து விட்டது- செப்டம்பர் 18க்கும் 21க்கும் இடையில் பாகிஸ்தான் மிக அதிக சக்தி கொண்ட வெடி பரிசோதனைகளை நிகழ்த்தியதாக சி-ஐ-ஏ- முடிவுக்கு வந்திருப்பதாக வாஷிங்டன் போஸ்ட் தினசரி கூறியது-

> **இந்திய துணைக்கண்டம் கடந்த சில ஆண்டுகளில் அணு ஆயுதப்போரின் விளிம்பிலிருந்தது என புதிய தகவல்களை தாங்கி 'கிரிட்டிகல் மாஸ்' என்ற நூல் சைமன் அன்ட் ஹூஸ்டர் லிமிட்டெட் பதிப்பாளர்களினால் வெளியிடப்பட்டுள்ளது அந்நூலின் சில பகுதிகள் இங்கு தரப் படுகின்றன.**

அமெரிக்காவின் ஆதரவுதந்த ...

செயலர் யாகூப்கானிற்கும் தெரிவித்தார்- தன்னுடைய நாட்டின் விஞ்ஞானிகளும், ராணுவத் தலைவர்களும் தமக்குக் கூறாத இரகசியத்தை ஓர் அமெரிக்கர் சொல்லி பெனாசீர் அறிய வேண்டிய நிலை- அணுகுண்டை உருவாக்கும் எண்ணம் இல்லை என்று அமெரிக்காவிற்குத் தெரியப்படுத்துமாறு தனிப்பட்ட முறையில் பெனாசீர் ஸீகலிடம் சொன்னார்

ஆனால் காலம் கடந்துவிட்டது. ஆப்கானிஸ்தானில் சோவியத்ஆக்கிரமிப்புநடந்த 10 ஆண்டுகளில் பாகிஸ்தான் விரிவான அணு ஆயுத உள் கட்டமைப்பை உருவாக்கி விட்டிருந்தது. பலநூறுகோடி ரூபாவை செலவிட்டு பல வருடங்கள் பலர் உழைத்து சாமர்த்தியமும், உறுதியும், சாணக்கியமும் கட்டி நிறுவப்பட்ட அணுஆயுதத் திட்டத்தைக் கைவிடடு விட முடியுமா?

மார்க் ஸீகல் மூலம் அணு ஆயுதம் பற்றி அறிந்த பெனாசீர் அதன் பரப்பைக் கண்டு அசந்து விட்டார். இமயமலையின் அடிவாரத்தில் இருந்த கஹூடா ஆலைக்கு ஆண்டிற்கு 12 அணு குண்டுகளைத் தயாரிக்கத் தேவைப்படும் அணுகுண்டு ரக யூரேனியம் வாயுவை தயார் செய்யும் தகுதி இருந்தது. அமைதிக்காக அணுசக்தி எனும் திட்டத்தின் கீழ் அமெரிக்காவின் ஜெனரல் ஐசனோவர் அளித்த அணு உலை சீன தொழில்நுட்பவியலர்களால் மேம்படுத்தப்பட்டு நவீனமயமாக்க ...

... கள் நகர்த்தப்படுவது குறித்துப் பாகிஸ்தான் உளவுத் துறைக்குத் தகவல் கிடைத்தது- இவற்றில் அணுஆயுதம் இருக்கலாம் எனப் பாகிஸ்தான் நம்பியது- இந்தியஇராணுவம் பாகிஸ்தான் இராணுவத்தை விட இரண்டரை மடங்கு பெரியது. அணுஆயுதம் தாங்கிச் செல்லும் 220 விமானங்கள் இந்தியாவிடம் இருந்தன. இன்டஸ் நதிப்பள்ளத் தாக்கை இந்தியப் படை கைப்பற்றினால் பாகிஸ்தான் இரண்டு துண்டாகி நாடே சரியாகி விடும் எனப் பாகிஸ்தான் அஞ்சியது-

சில தனிப்பட்ட ஆய்வாளர்கள் இந்தியாவிடம் 100 அணுஆயுதங்கள் இருப்பதாகக் கூறினார்கள்- சி-ஐ-ஏ ஒரு டசின்தான் இந்தியாவிடம் உள்ளதாகக் கணக்கிட்டது. 36முதல் 48 வரைஅணு ஆயுதங்கள் இருப்பதாகப் பாகிஸ்தான் கணக்கிட்டது-

குளிர்காலம் முடிவடைந்தது- அணுஆயுதம் செய்து முடிக்கின்ற அளவிற்கு பாகிஸ்தானிடம் அணுஆயுத ரக யுரேனியம் வாயு வடிவில் இருந்தது- ஆனால் அது ஆயுதத்தை செய்து முடிக்கவில்லை- எனினும் பாகிஸ்தானிடம் அணுஆயுதம் உண்டு- அதை எம்-11 ஏவுகணைகள் மூலமும், எப்-16 விமானங்கள் மூலமும் பாகிஸ்தான் செலுத்தக் கூடும் என இந்தியா நம்பியது- ஆனால் எப்-16 விமானம் மூலம் பாகிஸ்தான் அணுஆயுதத்தை எடுத்துச் செல்ல முடியாதபடி பாகிஸ்தானுக்கு வழங்கப்பட்ட எப் 16 விமானங்கள் அதை விநியோகித்த ஜெனரல் டைனமிக்ஸ் நிறுவனத்தினால் மாற்றியமைக்கப்பட்டிருந்தது- ஏதாவது சாதனங்களைத் திருட்டுத்தனமாகப் பெற்று அல்லது தானாகவோ பாகிஸ்தான் இவ்விமானங்களை அணுகுண்டுகாவிகளாக மாற்றிஇருக்குமா என்பது அமெரிக்கவட்டாரங்களில் சர்ச்சைக்குஉள்ளாகியது- அணுகுண்டுவீசும் பயிற்சியில்எப் 16 பயிற்சிபறப்பிலஈடுபட்டதற்கு சான்றுகளும் உள்ளன- அணுகுண்டு தயாரிக்கும் அளவி...

குற்றச்சாட்டை மறுக்க முற்பட்டுள்ளார்.

அதாவது சர்வதேச மன்னிப்புச் சபையின் குற்றச்சாட்டை மறுக்க முற்பட்ட சிறிலங்காவின் முன்னாள் இராணுவத்தளபதி, கைது செய்யவில்லை, காவலில் வைத்துள்ளோம் எனக்கூறுவது ஒரு வேடிக்கையான அம்சமாகும். அதாவது கைது செய்யாமல் காவலில் வைப்பது எப்படி என்பதை சிறிலங்காவின் முன்னாள் இராணுவத்தளபதியிடமே எவரும் கேட்டுக்கற்றுக் கொள்ள வேண்டும்.

ஆனால் அவரது பதவிக் காலத்தில் கைது செய்யப்பட்டவர்களில் ஆயிரக்கணக்கானோர் காணாமற் போயுள்ள நிலையில் இன்று கைது செய்யப்பட்டவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்ற விடயம் முன்னேற்றகரமானதாக இருக்கலாம். ஆனால், வீதியில் சென்றுகொண்டிருந்த தமிழ்இளைஞர்கள் விசாரணைக்காக பொலிஸ் கூண்டிற்குள் போய் நின்று கொள்வது போன்று சிறில் ரணதுங்கா கூறும் கதைதான் வேடிக்கையாகவுள்ளது.

ஆனால் அதைவிட வேடிக்கையானது, கைது செய்யப்பட்டவர்கள், சித்திரவதைக்கு உள்ளாக்கப்படவில்லை என்பதும் அவ்வாறான விடயங்களை விசாரிக்கவென ஜனாதிபதி ஆணைக்குழு உள்ளது என்ற சிறில் ரணதுங்காவின் கூற்றாகும். சிறிலங்கா இராணுவத்தின் இனப் படுகொலைகளும் சித்திரவதைகளும் உலகப் பிரசித்தமானவை. சிறிலங்கா சிறைச்சாலைகளில் இருந்து வெளிவந்த தமிழ் இளைஞர்கள் வெளியிடும் சித்திரவதை பற்றிய தகவல்கள் அதிர்ச்சியளிப்பவை; கற்பனைக்கு அப்பாற்பட்டவை. இதை உறுதிப்படுத்துமாப் போல் சர்வதேச மன்னிப்புச்சபையும் கைது செய்யப்பட்ட இளைஞர் ஒருவரின் பிறப்பு உறுப்பு துண்டிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியிட்டுள்ளது.

இதனைச் சித்திரவதை இல்லை என்றால், இதைவிட மேலான சித்திரவதை என்ன என்பதை சிறில் ரணதுங்கா வெளியிடுதல் நல்லதாகும். இதேவேளை சிறிலங்கா ஜனாதிபதி ஆணைக்குழு சித்திரவதைதொடர்பானவிசாரணைகளைமேற்கொண்டுதீர்ப்பளிப்பதென்பது சிறிலங்காவின் உலகை ஏமாற்றும் நடவடிக்கையே ஒழிய வேறு எதுவும் இருப்பதாக இல்லை.

இதுபோன்ற ஜனாதிபதி ஆணைக்குழுக்கள், விசாரணைக் கமிஷன் என பல குழுக்களும், கமிஷன்களும் கடந்த காலத்தில் நியமிக்கப்பட்டவை தான். ஆனால் அவை எவையும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கவில்லை குற்றங்களைக் கண்ணால் கண்ட சாட்சியங்கள் விசாரிக்கப்பட்டபோதும் விசாரணையின் முடிவில் தீர்வு எதுவும் வெளிவரவில்லை.

இந்நிலையில் தமிழ் இனம் என்ற ரீதியில் மட்டுமே கைதாகும்தமிழ்இளைஞர்களுக்கு பௌத்த பேரினவாத சக்திகளிடம் இருந்து பாதுகாப்பு, நீதி என்பன கிடைக்கும் என்று எவ்வாறு எதிர்பார்க்க முடியும்? அதிலும் குறிப்பாக இலங்கை பூராவும் சிங்கள பேரினவாத சக்திகளினாலேயே ஆளப்பட வேண்டும் எனக்கூறிவரும் ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா ஆட்சியில் ஜனாதிபதி ஆணைக்குழு எவ்வாறு பாதிக்கப்பட்ட தமிழ்மக்களுக்கு நீதி வழங்கும்.

---

னங்களையும் கூட்டாக உருவாக்கின.

1976 அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஹென்றி கிஸிங்கர் பாகிஸ்தான் வந்தார். இவரிடம் பாகிஸ்தான் அணுஆயுதத்திட்டம், வெளிநாடுகளில் இருந்து உபகரணங்கள் வாங்கும் யோசனை இவை பற்றிய பல புலனாய்வுத்தகவல்கள், பாகிஸ்தான் எதில் ஆர்வம் கொண்டுள்ளது என்பதை காட்டும் தெளிவான விபரங்கள் என்பன இருந்தன- பிரான்ஸிடமிருந்து புளூடோனியம் செறிவூட்டும் உபகரணம் வாங்கும் ஒப்பந்தத்திலிருந்து பாகிஸ்தான் பின் வாங்காவிட்டால் அமெரிக்கா இதை மன்னிக்காது என்று கிஸிங்கர் பாக்பிரதமரை மிரட்டினார்.

அந்தபிரெஞ்சு ஒப்பந்தமும் நிறைவேறாமலேயே போயிற்றுஆனால் அந்தவிஷயத்தில் பூட்டோ பிடிவாதமாக நின்றது அவரது வீழ்ச்சிக்கு காரணமாயிற்று என்பதை அவர் மகள் பெனாசீர் புரிந்து கொண்டார்-இறுதியில் ஜனாதிபதி ஷியாவினால் பூட்டோ உயிரையும் இழந்தார்-

### அரபுநாடுகளுடன் பேச்சு

கிஸிங்கர் எச்சரித்து விட்டு போனபின் சரியாக ஒருவருடம் கழித்து 1977இல் மத்திய கிழக்கு நாடுகளுக்கு விஜயம் செய்த பூட்டோ சவூதி அரேபிய மன்னர் காலிதுடனும் லிபிய ஜனாதிபதி கடாபியுடனும் பேசும்போது தன் நாட்டின் சொற்ப அளவு அணு ஆயுதத் தொழில் நுட்பத்தை அவர்களுக்கு பணத்திற்கு விற்க விரும்புவதாகக் கூறினார். இதை சி- ஐ- ஏ. அறிந்து விட்டது. பூட்டோ கூறியதை வைத்து சவூதி அரேபியாவும் லிபியாவும் பணம் வழங்கத் தயாராக இருக்கவில்லை- ஏனெனில், அன்று பாகிஸ்தானின் ஆயுத ஆராய்ச் சிஏறத்தாழ கால்காசு கூடபெறாதநிலையில் இருந்ததேயாகும்-

ஆனால் விரைவில்நிலைமை முன்னேற்றம் கண்டது- இஸ்லாமாபாத் விமானநிலையத்தில் இன்ஜினியரிங் அன்ட் ரிசர்ச் லாட் என்ற இடத்தில் யூரேனியம் செறிவூட்டுவதில் பூர்வாங்க ஆராய்ச்சி வளர்ச்சி நடந்து கொண்டிருந்தது-

அந்த இடத்திற்கு பாகிஸ்தான் சிவில் விமானங்களும் நீக்க முறையை பாகிஸ்தான் பயன்படுத்தி வருவது தெரிய வந்தது. பாகிஸ்தானை அணுசக்தி திட்டம் பற்றி கேட்டபோதெல்லாம் அதன் எதிரி இந்தியா கூறிவருவதைப் போல எல்லாம் ''அமைதி நோக்கத்திற்காகவே'' என பாகிஸ்தானும் குறிப்பிட்டது.

1983இல் பென்டகன் ஆய்வறிக்கை பாகிஸ்தானின் உள்நோக்கம் பற்றித் தெளிவாகக் குறிப்பிட்டது. பாகிஸ்தான் அணு ஆயுத தயாரிப்பு திட்டத்தை நிறைவேற்றி வருகிறது என்பதற்குச் சரியான சாட்சியம் கிடைத்துள்ளது. கஹூடாவில் உள்ள ஆலைதான் திட்டத்தின் மையம் எனக் குறிப்பிட்ட அவ்வறிக்கை இதன்நோக்கம் அணுஆயுதம் என்பது தெளிவு என இறுதியில் குறிப்பிட்டிருந்தது.

மறுபுறம் அமெரிக்க வெளியுறவுத் துணை அமைச்சர் ஜேம்ஸ் பக்லி 1981 ஜூன் 24ஆம் திகதி நாடாளுமன்றத்தின் கமிட்டியின் முன்னிலையில் ''பாகிஸ்தான் அரசுக்கு அணுவாயுதம் தயாரிக்கும் நோக்கமில்லை என்று அந்த நாட்டின் அமைச்சர்களும், ஜனாதிபதியும் தெரிவித்து விட்டனர்' எனக் கூறினார்.

இதேசமயம் அமெரிக்க வெள்ளை மாளிகையின் இரட்டை வேடம் அரங்கேறியது. சீனாவும் பாகிஸ்தானுமாக உருவாக்கிய அணு ஆயுத வடிவமைப்பை அமெரிக்க ஆயுத நிபுணர்கள் அலசிப் பார்த்து அணுகுண்டு உருவாவது சாத்தியமே எனஅறிந்தார்கள்.

ஆனால் இஸ்லாமிய அணுகுண்டை விட ஆப்கானிஸ்தானிலுள்ள ஆட்சியைக் கவிழ்ப்பது முக்கிய வேலை என அமெரிக்கா நிச்சயித்தது. அமெரிக்க நாடாளுமன்றத்திற்கும் மக்களுக்கும் பல பொய்கள் அவிழ்த்து விடப்பட்டுக் கொண்டிருந்தது. அச்சமயம் மறுபுறம் பாகிஸ்தானுக்குக் கப்பல் கப்பலாக 'விநியோகம்' நடந்தது. ரீகன் ஜனாதிபதியானதும் அமெரிக்க ரகசியக் கணக்கிலிருந்து பாகிஸ்தானுக்குப் பெருமளவு உதவி வழங்கப்பட்டது. சி- ஐ- ஏ யின் தலைவர் வில்லியம் ஜே. கெய்சி மூலம் இது நடந்தது.

ஆப்கானிஸ்தானில் பாகிஸ்தான் உளவுத் துறையான ஐ- எஸ்- ஐ- க்ளத்தில் இறங்கு

**இந்திய துணைக்கண்டம் கடந்த சில ஆண்டுகளில் அணு ஆயுதப்போரின் விளிம்பிலிருந்தது என புதிய தகவல்களை தாங்கி 'கிரிட்டிகல் மாஸ்' என்ற நூல் சைமன் அன்ட் ஹுஸ்டர் லிமிட்டெட் பதிப்பாளர்களினால் வெளியிடப்பட்டுள்ளது அந்நூலின் சில பகுதிகள் இங்கு தரப்படுகின்றன.**

அமெரிக்காவின் ஆதரவுதந்த துணிச்சலில் பாகிஸ்தானியர் தமது அணு ஆற்றலை பெரிதாகப் பேச ஆரம்பித்தனர்- இது தொடர்பான தொழில் நுட்பத்தைப் பெறுவது எம் உரிமை- அது கிட்டியதும் இஸ்லாமிய உலகம் முழுவதிற்கும் அது சேரும் என ஜனாதிபதி ஷியா கூறினார்-

1987 மேயில் முதல் வாரத்தில் சி- ஐ- ஏ- தலைவர் கெய்சி இறந்து விட்டார்- அடுத்த ஆண்டின் ஒகஸ்ட்டில் பாகிஸ்தான் ஜனாதிபதி ஜெனரல் ஷியாவும்அவரைத் தொடர்ந்து பதவிக்கு வரவிருந்த ஜெனரல் அக்தரும் மர்மமுறையில் விமானம் வெடித்துச் சிதறியபோது கொல்லப்பட்டனர்- நவம்பரில் பெனாசிர் பூட்டோ ஆட்சியைத் தேர்தலில் கைப்பற்றினார்- ஆனால் அவர் கட்சிக்கு அறுதிப்பெரும்பான்மை இல்லாததால் ஜனாதிபதி குலாம் இஷாக்கான் மற்றும் ஜெனரல் பேகுடன் பெனாசீர் பல விஷயங்களில் விட்டுக் கொடுத்து சமரசமாக போக வேண்டியிருந்தது. சமரச முயற்சியில் இரகசியமாக அமெரிக்காவும் கலந்து கொண்டது- அமெரிக்காவின் பாகிஸ்தான் தூதுவர் ஒக்லேவின் ஆலோசனையின் பேரில் தொடர்ந்து முஜாகுதீன்களுக்கு உதவவும் குலாம் இஷாக்கானை நிரந்தர ஜனாதிபதி ஆக்கத் தன் செல்வாக்கைப் பயன்படுத்தவும் பெனாசீர் ஒப்புக் கொண்டார்- குலாம் இஷாக்கான் தொடர்ந்து பதவியில் இருப்பது பெனாசீருக்கு வருத்தமாக இருந்தாலும் அமெரிக்காவின் வேண்டுகோளுக்கு அவர் இசைவாக இருந்து கொண்டார்-

1989 பெப்ரவரி மார்க்ஸீகல் இஸ்லாமாபாத்திற்கு வந்து பாகிஸ்தான் அணு ஆயுதத் தகுதி அடைந்திருப்பதைப் பற்றித் தமக்குகிடைத்த நம்பகமான தகவல்களை பெனாசீருக்கும் வெளியுறவுச் சுடுத்தப்பட்டு நவீனமயமாக்கப்பட்டிருந்தது. அணுஆயுத வடிவமைப்பு மையம் இஸ்லாமாபாத்தை சுற்றி 100மைல் பரப்பில் விரிந்து பரவியிருந்தது-

இதைவிட முக்கியத்துவம் உடையது ப்ளூடோனியம் தயாரிக்க1980 களின் நடுவில் இன்டஸ் நதிக்கரையோரம் மிக இரகசியமாக நிறுவப்பட்ட அணுஉலை 1992 இறுதிக்குள் இதை அமைப்பதற்கான வேலை அரைவாசி முடிந்திருந்தது- இது செயற்படத் தொடங்கினால் ஆண்டிற்கு ஐந்து அணு குண்டுகள் தயாரிக்கத் தேவைப்படும் ப்ளூடோனியம் கிடைக்கும். அமெரிக்காவின் நிர்ப்பந்தத்தின் பேரில் தங்களின் இந்த வாய்ப்பைக் கைவிட பாகிஸ்தானிய ராணுவ ஜெனரல்கள் தயாராக இல்லை

1989இல் பெனாசீர் அமெரிக்காவிற்கு பயணம் செய்த போது அவர் நேரடியாக ஜனாதிபதி புஷ்ஷின்மாளிகை செல்லவில்லை- சி- ஐ- ஏ-இயக்குநர் வில்லியம் வெப்ஸ்டரைக் காண நேர் எதிரில் உள்ள கட்டடத்திற்கு அவர் சென்றார். ராணுவமும், இஷாக்கானும் தன்னிடமிருந்து பல விஷயங்களை மறைக்கின்றனர் என்பது பெனாசீருக்குப் புரியத் தொடங்கியது. அணு ஆயுத சாதனம் என்பதற்கான விளக்கத்தை சி-ஐ ஏ- இயக்குநர் பெனாசீருக்கு விளக்கினார்.

இந்தியக் கட்டுப்பாட்டிலுள்ள காஷ்மீரில் 1990 ஜனவரியில் வன்முறை வெடித்த பின் மக்கள் செல்வாக்கை இழந்த அரசை நீக்கிய டில்லி கூடுதல் படைகளை கஷ்மீருக்கு அனுப்பியது- இருநாடுகளின் தலைநகரங்களிலும் பதற்றம் அதிகரித்தது- மே மாதத்தில் இந்திய இராணுவம் ஒரு விசேட அதிரடிப் படையை எல்லைக்கு அனுப்பியது- குறுந்தூர ஏவுகணை விநியோகித்த ஜெனரல் டைனமிக்ஸ் நிறுவனத்தினால் மாற்றியமைக்கப்பட்டிருந்தது- ஏதாவது சாதனங்களைத் திருட்டுத்தனமாகப் பெற்று அல்லது தானாகவோ பாகிஸ்தான் இவ்விமானங்களை அணுகுண்டுகாவிகளாக மாற்றிஇருக்குமா என்பது அமெரிக்கவட்டாரங்களில் சர்ச்சைக்கு உள்ளாகியது- அணுகுண்டுவீசும் பயிற்சியில்எப் 16 பயிற்சிபறப்பில்ஈடுபட்டதற்கு சான்றுகளும் உள்ளன- அணுகுண்டு தயாரிக்கும் அளவிற்கு வந்துவிட்ட பாகிஸ்தானுக்கு அதை வீசும் திறன் பெற்றிருக்க முடியும்

இந்தியா பாகிஸ்தானைத் துண்டாட முனைந்தால் அணுகுண்டை பயன்படுத்தத் தயங்கேன் என இஷாக்கான் கேட்ஸிடம் சூசகமாகக் கூறினார்- ஆனால் கேட்ஸ் பாகிஸ்தானுக்கும் இந்தியாவிற்கும் போர் மூண்டால் என்ன வெல்லம் நடக்கும் என நாம் கணக்குப் பார்த்துவிட்டோம்- நீங்கள் வெல்ல வாய்ப்பே இல்லைஎன்றார்- போர் மூண்டால் எங்களிடமிருந்து உதவியை எதிர்பார்க்காதீர்கள் எனத் திட்டவட்டமாக கேட்ஸ் கூறிமுடித்தார்- பல ஆண்டுகளாகத் துணைநின்ற பாகிஸ்தானை அமெரிக்கா வஞ்சித்து விட்டதாக இஷாக்கான் உணர்ந்தார்- இதனால் இஷாக்கான் கேட்ஸிடம் பேரம் பேச ஆரம்பித்தார்- இந்தியாவுடனான போரில் பாகிஸ்தான் அணு ஆயுதங்களைப் பயன்படுத்தாமல இருப்பதற்கு அமெரிக்கா நவீன ஆயுதங்களைப் பாகிஸ்தானுக்குத் தரவேண்டும் எனக் கேரினார்-

கேட்சும் மற்றொருவரான கால்ப் ரெய்த்தும் இரு நாடுகளுக்கும் இடையே நம்பிக்கை ஏற்படுத்த மேற்கொண்ட முயற்சிகள் ஆறு வாரங்களுக்குப்பின் வெற்றி தந்தன- அதன் பின்பே அணு ஆயுதப் போரின் விளிம்பிலிருந்து இரு நாடுகளும் மீண்டன- ''என் அனுபவத்தில் இவ்வளவு பயங்கரமான அணுஆயுதப் போரின் அபாயம் ஏற்பட்டதில்லை- உலகம் அணுஆயுதப் போருக்கு இத்தனை அருகில் வந்ததில்லை'' என சி-ஐ- ஏ யின் துணை இயக்குநர் ரிச்சர்ட் கெர் பின்னர் பேட்டி ஒன்றின்போது குறிப்பிட்டார்-

(முற்றும்)

# இராணுவ நடவடிக்கைகளினால்
# 1479 இந்து ஆலயங்கள் சேதம்

(நமது நிருபர்)

வடக்குக் கிழக்கில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கைகளால் 1479ற்கு மேற்பட்ட ஆலயங்கள் சேதமடைந்திருப்பதாகவும் இவற்றின் சேதம் 283 மில்லியன் எனவும் இந்துசமய கலாசார அலுவல்கள் அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்குக் கிழக்கிலுள்ள யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்திவு, மன்னார், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் 1990 டிசம்பர் வரையான காலப் பகுதியில் மட்டுமே இச்சேதங்கள் ஏற்பட்டுள்ளதாகக்குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி யாழ். மாவட்டத்தில் 513 ஆலயங்கள் சேதமடைந்துள்ளன. இவற்றின் பெறுமதி 128 மில்லியன் ரூபாவாகும். கிளிநொச்சி மாவட்டத்தில் 33 ஆலயங்கள் சேதமடைந்துள்ளதாகவும் இவற்றின் இழப்பீட்டுத் தொகை 2-1 மில்லியன் ரூபாவாகும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 131 ஆலயங்கள் சேதமடைந்ததுடன் இவற்றால் 39 மில்லியன் ரூபா சேதமேற்பட்டுள்ளதாம். மன்னார் மாவட்டத்தில் 37 ஆலயங்கள் சேதமடைந்துள்ளதுடன் இவற்றின் இழப்பீட்டுத் தொகை 7 மில்லியன் ரூபா எனவும் வவுனியா மாவட்டத்தில் 136 ஆலயங்கள் சேதமடைந்திருப்பதுடன் 16 மில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் திருகோணமலை மாவட்டத்தில் 199 ஆலயங்கள் சேதமடைந்திருப்பதுடன் 34 மில்லியன் இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 283 ஆலயங்கள் சேதமடைந்துள்ளதுடன் இதனால் 27 மில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அம்பாறை மாவட்டத்தில் 147 ஆலயங்கள் சேதமடைந்துள்ளதுடன் 30 மில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் மேற்படி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(ச, க)

## கலைவிழா

புலோலி சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையத்தின் பௌர்ணமிக் கலைவிழா நாளை வெள்ளிக்கிழமை மாலை ஆறு மணிக்கு நிலைய முன்றலில் நிலையத் தலைவர் திரு அ. துரைசிங்கம் தலைமையில் இடம் பெறும்.

பல பெரியார்களின் உரையும், நிலையச்சிறுவர் பாடசாலை மாணவ, மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும். (24)

# ஈழத் தமிழர் இன்னல்கள் மத்தியிலும்
# கலை பண்பாட்டை பேணுகின்றனர்

### லண்டன் லூசியம் நகர் மேயர் தெரிவிப்பு

(வடமராட்சி)

இங்குள்ள தமிழ் மக்கள் இன்னல்கள், துயரங்கள் வந்தபோதிலும் இவர்கள் கலை, கலாசாரத்தோடு வாழ்வதைக் கண்டு என் மனம் பெருமிதம் அடைகிறது

இவ்வாறு யாழ். வந்து நேற்று திரும்பிய லண்டன் லூசியம் நகர் மேயர் திரு. சின்னத்தம்பி -சுப்பிரமணியம் எமது வடமராட்சிச் செய்தியாளருக்கு பருத்தித் துறை துறைமுகத்தில் வைத்து தெரிவித்தார்,

அவர் மேலும் தெரிவிக்கும்போது, இங்குள்ள தமிழ் மக்கள் பசி பட்டினியோடு வாழ்கின்ற போதிலும் மகிழ்ச்சியோடு வாழ்வதை காணும் போது எனது மனம் மகிழ்ச்சியடைகிறது.

அச்சத்தை கண்டு துவண்டு போகாமல் இந்நாட்டு தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர். நீண்ட கால 'இராணுவ நடவடிக்கையின் போதும் இங்குள்ள கலை, கலாசாரம் பேணிப் பாதுகாக்கப்பட்டு வருவதையிட்டு என் மனம் பூரிக்கிறது.

ஜேர்மனி நாட்டின் மேல் அந்நிய நாடுகள் படையெடுத்தன. தாக்கின ஆனால் அந்த நாடு அழிந்து போகவில்லை. அதற்கு மாறாக தளைத்தது. அதற்குக் காரணமாக இருந்தவர் ''ஷோஸலன்'' என்பவரே.

இங்கு வந்த நான் இப்பகுதி மக்களைக் கண்டு மகிழ்ச்சியடைந்த நிலையில் திரும்பிச் செல்கிறேன் என்றார். (யோ)

# பயங்கரவாதத்தை நசுக்குவதே
# பிரச்சினை தீர ஒரேவழி

### அஸ்கிரிய பீடாதிபதி கூறுகிறார்

(கொழும்பு)

''தற்போதைய பிரச்சினைக்கு எப்படியாவது முடிவு காணப்படல் வேண்டும். இதை தீர்ப்பதற்கு யாராவது உண்மையான முயற்சிகளை ஆரம்பிக்கவேண்டும். ஆனால் இதற்கு சமாதானப் பேச்சுகளும் மாநாடுகளும் உதவ மாட்டாது'' என அஸ்கிரிய பீடாதிபதி பலிப்பான சிறி சந்திரானந்த மகாநாயக்க தேரோ தெரிவித்துள்ளார்.

புதிய விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் ஒலிவர் ரணசிங்க அஸ்கிரிய பீடம் சென்று அவரிடம் ஆசிபெற்ற வைபவத்திலே மகாநாயக்க தேரோ இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் கருத்து வெளியிடுகையில்; விடுதலைப் புலிகளை இந்திய இராணுவத்தால் கூட நிராயுதபாணிகளாக்க முடியாமற் போனது. இதற்கு ஒரே வழி எந்த வழியிலாவது பயங்கரவாதத்தை நசுக்குவதே யாகும்.

புதிய விமானப்படைத் தளபதி தனக்குள்ள அனைத்து அதிகாரத்தையும் பயன்படுத்தி வடக்கில் நிலவும் பயங்கரவாதத்தை நசுக்கி விடவேண்டும் எனவும் அஸ்கிரிய பீடாதிபதி கேட்டுக் கொண்டார்.

### வவுனியா காவலரணில் வைத்து

# காதுகேட்காத வயோதிபர் படையினரால் சுட்டுகொலை

வவுனியா காவலரணில் வயோதிபர் ஒருவர் இராணுவத்தால் சுட்டுக்கொல்லப் பட்டார்.

மேற்படி சம்பவம் பற்றி தெரியவருவதாவது சாளம்பைப் பகுதியில் வயோதிபர் ஒருவர் இராணுவக் காவலரணை தாண்டி சென்றதாகவும் இராணுவத்தினர் குரலெழுப்பியபோதும் அவர் நிற்காமல் சென்றுகொண்டிருந்தவேளை இராணுவத்தினர் அவரை சுட்டுக்கொன்றதாகவும் அங்கிருந்துகிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன. அச்செய்திகள் மேலும் தெரிவிக்கையில் சுடப்பட்டு இறந்தவர் காது கேட்காதவர் என தெரிவிக்கின்றன.

## 7000பரல்

மாலை கொழும்பில் இருந்து கிடைத்த வானொலிச் செய்தியை மேற்கோள் காட்டி யாழ். அரச அதிபர் தெரிவித்தார்.

மண்ணெண்ணெய் ஏற்றும் பணி முடிவடைந்ததும் இக் கப்பல் மிகவிரைவில் பருத்தித் துறை நோக்கி புறப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (பா)

## சிறிலங்கா

இந்த ரக விமானங்கள் தயாரிக்கப்பட்டதிலிருந்து 60 மட்டுமே விற்பனை செய்யப் பட்டதாகவும் இவற்றில் 20 விமானங்கள் பாவனைக்கு உதவாதவை என ஒழித்து ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. மேலும் இந்த ரக விமானங்களுக்கு உரிய உதிரிப்பாக தயாரிப்பும் கைவிடப் பட்டுள்ளது.

# அமைதி நிலையை தோற்றுவிக்க முயற்சித்து வருகிறோம்

### மதகுரு அலெக்ஸ்ஸாண்டர் தெரிவிப்பு

(வடமராட்சி)

வடக்கு கிழக்கில் ஒரு அமைதி நிலையைத் தோற்றுவிகக எமது சமாதானக் குழு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

கடந்த மாதம் 26ஆம் திகதி அதிமேற்றிராணியார் தலைமையில் யாழ் வந்திருந்த சமாதானக் குழுவில் அங்கத்துவம் பெற்றவரான மதகுரு அலெக்ஸாண்டர் நேற்று மீண்டும் யாழ் வந்திருந்த போது பருத்தித்துறை துறைமுகத்தில் எமது வடமராட்சி செய்தியாளரிடம் முன்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அதிமேற்றிராணியார் நீக்கலஸ் பெர்னாண்டோ கடந்த மாதம் இறுதியில் இங்கு வந்து நிலைமைகளை அவதானித்திருந்தார் கொழும்புக்குச் சென்றிருந்த அவர் அரசிற்கு அதனைத் தெரிய வைத்ததோடு இங்குள்ள மக்களின் கஷ்ட நிலையையும் எடுத்துரைத்தார்.

யாழ். மாவட்ட மக்களின் கஷ்ட நிலையைக் கருத்திற்கொண்டு எமது சமாதானக் குழு அரசுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டிருந்தது. எமது சமாதானக் குழு இவ்விடயத்தில் ஆரம்பக்கட்டத்தை ஆரம்பித்துள்ளது. வடக்கு கிழக்கில் அமைதியை உருவாக்க சமாதானக் குழு தொடர்ந்தும் முயற்சி செய்யும் என்றார். (யோ)

### பிராந்தியசுகாதார அத்தியட்சகர் பணிமனை

# பிரிட்டிஷ் அன்பளிப்பு ஏப்பிரலுக்குப் பின் வரும்

(நமது நிருபர்)

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக்குட்பட்ட மருத்துவமனைகளுக்கு பிரிட்டன் அன்பளிப்புச் செய்த மருத்துவ உபகரணங்களை இங்கு எடுத்து வருவதற்கான முயற்சி வரும் ஏப்பிரல்மாதமே மேற்கொள்ளப்படவுள்ளது. இவ்வுபகரணங்கள் கொண்ட கொள்கலன்கள் நான்கு வருடங்களுக்குமுன் அதாவது 1990ஆம் ஆண்டு யூன் மாதம் கொழும்பிற்கு வந்து சேர்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர் பணிமனைக்குட்பட்ட மருத்துவமனைகளுள் மந்திகை ஆதார மருத்துவமனைக்கே கூடுதலான 80 கிலோ மிற்றப் வாவ்பிபாக்கி ஒன்று, மெத்தைகள் 100, இரத்தத்தை பாதுகாப்பதற்கு பயன்படுத்தப்படும் குளிரூட்டி சாதனம் ஒன்று, குளிரூட்டி ஒன்று, மகப்பேற்றுக்கட்டில் 2, நவீன ஸ்ரெச்சர் 2 என்பவற்றுடன் மேலும் பல பொருட்களும் உள்ளன.

மேற்படி உபகரணங்களுள் மற்றைய மருத்துவமனைக்கான சில பொருட்களின் விபரம் வருமாறு: தெல்லிபளை மருத்துவமனை, சாவகச்சேரி மருத்துவமனை, கிளிநொச்சி மருத்துவமனை என்பனவற்றிற்கு தலா ஒரு 80 கிலோவாற் மின்பிறப்பாக்கிகளும் மற்றும் சுற்றாடற்கூறு மருத்துவமனைகள் என அழைக்கப்படும் கோப்பாய், சங்கானை,

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 23-2-1994

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 960

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

27-6439, 43 3993, 27-6579, 26-1376, 24-2496, 26-4673, 26-3473, 27-0994, 28-2385, 26-1414, 28-6624, 26-8810, 27-0 05, 41-7273, 42-1046, 28-4255, 24-4323, 26-7068, 41-4176, 41-7865,

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

26-507, 24-0336, 26-3937, 26-5244, 27-5449, 41-8096, 27-5734, 26-6983, 24-1797, 41-7109, 22-9193, 26-0032, 41-7693, 28-2345, 42-3927, 43-2666, 40-2573, 26-6526, 27-5823, 27-9756, 40.2394, 27-2661, 24-9758.


மாருதியின் இன்றைய

புதிய வெளியீடுகள்

★ பாசமலர்கள் (அரவிந்தசாமி, ரேவதி, நிழல்கள் ரவி)

★ வீட்டைப் பார் நாட்டைப் பார் (சரவணன், உங்கள் அபிமான நட்சத்திரங்கள்)

என்றும் நெஞ்சைவிட்டகலா


## மரண அறிவித்தல்

வைப்புச் செய்த மருத்துவ உப கரணங்களை இங்கு எடுத்து வருவதற்கான முயற்சி வரும் ஏப்பிரல்மாதமே மேற்கொள் ளப்படவுள்ளது. இவ்வுபகர ணங்கள் கொண்ட கொள் கலன்கள் நான்கு வருடங்க ளுக்குமுன் அதாவது1990ஆம் ஆண்டு யூன் மாதம் கொழும் பிற்கு வந்து சேர்ந்தது என் பது குறிப்பிடத்தக்கது.

பிராந்திய சுகாதாரசேவை கள் பணிப்பாளர் பணிமனை க்குட்பட்ட மருத்துவமனைக ளுள் மந்திகை ஆதார மருத் துவமனைக்கே கூடுதலான உபகரணங்கள் உள்ளன. இம் மருத்துவ மனைக்கு உள்ள பொருட்கள் சில வருமாறு:

## ஹெந்தல

வது.

இதற்கான உத்தரவை அத் தியாவசிய சேவைகள்ஆணை யாளர் யாழ். அரச அதிபர் கா. மாணிக்கவாசகருக்கு வழங்கியுள்ளார். இதற்கான வானொலிச் செய்தி ஒன்று யாழ். அரச அதிபருக்கு கிடைக்கப் பெற்றுள்ளதுஎன அவர் நமது நிருபருக்கு தெரி வித்தார். (பா)

## கிழக்கில்

இராணுவ அதிகாரிகள் மட் டத்தில் கருத்து முரண்பாடு கள் காணப்படுகின்றன. ஒரு பகுதியினர் சிறிலங்கா சுதந் திரக் கட்சிக்கும் மற்றைய பகுதியினர் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் வாக்களிக்குமாறு வற்புறுத்துகின்றனர்.

## கரையோரம்

செய்யப்பட்டுள்ளது. அத் துடன் கடற்படைத் தளபதி யினால் அனுமதிக்கப்படும் வள்ளங்கள் மட்டுமே இக் கடற் பகுதியில் செல்ல அனுமதிக்கப்படும் என தெரி விக்கப்பட்டிருந்தது தெரிந் ததே.

அரசின் இந் நடவடிக்கை க்கு அண்டை நாடு ஒன்றின் அழுத்தமே காரணம் என அரசியல் அவதானிகள் கருத் துத் தெரிவிக்கின்றனர்.

## விடுதலைப்

லும் வழி திசைமாறிவிடும்' என்ற கவியுரையும், 'தவளை தாக்குதலில் துணைப்படையி னர்' என்ற கட்டுரையும் இடம்பெற்றுள்ளன.

றுக்கட்டிடில் 2, நவீன ஸ்ரெச் சர் 2 என்பவற்றுடன் மேலும் பல பொருட்களும் உள்ளன.

மேற்படி உபகரணங்களுள் மற்றைய மருத்துவமனைக் கான சில பொருட்களின் விப ரம் வருமாறு: தெல்லிப்பளை மருத்துவமனை, சாவகச்சேரி மருத்துவமனை, கிளிநொச்சி மருத்துவமனை என்பனவற் றிற்கு தலா ஒரு 80 கிலோ வாற் மின்பிறப்பாக்கிகளும் மற்றும் சுற்றாடற்கூறு மருத் துவமனைகள் என அழைக்கப் படும் கோப்பாய், சங்கானை, அச்சுவேலி, அக்கராயன் குளம், பளை போன்ற 9 மருத் துவ மனைகளுக்கு 17 கிலோ வாற்று மின்பிறப்பாக்கிகள் தலாஒவ்வொன்றும் உள்ளன. இவைதவிர வேறுபல மருத் துவ உபகரணங்களும் பிராந் திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக் குட்பட்ட மருத்துவமனைக ளுக்கு உள்ளதும் குறிப்பிடத் தக்கது.

மேற்படி உபகரணங்கள் யாவும் கொழும்பிலேயே முடங்கிக் கிடப்பது குறிப்பி டத்தக்க ஒன்றாகும். இவற் றைக் கொழும்பிலிருந்து எடுத்துவருவதற்கான முயற் சியை டாக்டர் என். விவேகா னந்தன் மேற்கொள்ளவுள் ளார். இவர் இங்கிருந்து மாற்றலாகி திருமலைக்கு வரும் ஏப்பிரல் மாதம் செல்ல வுள்ளதாகவும் பின் அங்கிரு ந்து கொழும்பிற்குச் சென்றே இவற்றை எடுத்து வருவதற் கான முயற்சியை மேற் கொள்ளவுள்ளதாகவும் பிராந்திய சுகாதார சேவை கள் பணிப்பாளர் பணிமனை யில் தெரிவிக்கப்பட்டது. (சி)

## வடமராட்சியில்

புலிகளின் மருத்துவப்பிரிவு பொதுச் சுகாதாரப் பகுதி யினர் உடனடியாக ஆரம்பித் தனர். பொதுமக்களை கொதித்தாறிய நீரைக் குடிக்குமாறும் தனிநபர் சுகாதாரத்தை பேணுமாறும் கேட்கப்பட்டுள்ளனர். பருத் தித்துறை சுகாதார வைத்திய அதிகாரியிடம் தொடர்பு கொண்டபோது சுகாதாரப் பகுதியினர் வடமராட்சியில் வல்வெட்டித்துறை, புலோலி மேற்கு, ஆகிய பகுதிகளுக்கு கூடிய கவனம் செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

மாருதியின் இன்றைய

# புதிய வெளியீடுகள்

★ பாசமலர்கள் (அரவிந்தசாமி, ரேவதி, நிழல்கள் ரவி)

★ வீட்டைப் பார் நாட்டைப் பார்

(சரவணன், உங்கள் அபிமான நட்சத்திரங்கள்)

என்றும் நெஞ்சைவிட்டகலா

பழைய புத்தம் புதிய ஒரிஜினல் படப் பிரதிகள்

தங்கப் பதுமை — அன்பே வா — உத்தமன்
மாட்டுக்காரவேலன் — பச்சை விளக்கு — குடியிருந்தகோவில்
கவரிமான் — பராசக்தி — கௌரவம்
ஒளிவிளக்கு — சிவகாமியின் செல்வன் — அடிமைப்பெண்

பழைய - புதிய பக்திப்படங்கள்

வரிசையில் எமது ஒரிஜினல் புதிய வெளியீடுகள்

சரஸ்வதிசபதம் — துணைவன்
மீனாட்சி திருவிளையாடல் — புனித அந்தோனியார்

சிறந்த இடைக்கால பட வரிசையில் ஒரிஜினல் பிரதிகளாக

மூன்று முடிச்சு — நான் வாழவைப்பேன் — தாய் மொழி
மறுபடியும் — தாயின் திர்ப்பு — ரோஜாவை கிள்ளாதே
மறவன் — தாலாட்டு

ஓடியோ (***Compact Disc Player***)

கொம்பாக்ட் டிஸ்க் மூலம் புதிய பாடல்கள் வெளிவந்துள்ளன

கீழ்வரும் எமது புதிய திரைப்பட பாடல்கள்

"கொம்பாக்ட் டிஸ்க்" இல் வெளிவந்துள்ளன

ராஜகுமாரன் — சிந்துநதிப்பூ — தாய்மனசு
உழவன் — மகளிர் மட்டும் — தாமரை
அமைதிப்படை — பத்தினிப்பெண் — காதல் விடுதலை
வீட்டைப்பார் நாட்டைப்பார் — சேதுபதி IPS
மம்மி டடி — விட்டில விசேசங்க — கிளிப்பேச்சை கேட்கவா
காவல்துறை — தூள்பறக்குது — மாப்பிள்ளைத்தோழன்
செந்தூரபாண்டி — சின்னதேவன்

ஓடியோவில் படப்பாடல்கள் உடனுக்குடன் பதிவுசெய்து கொடுக்கப்படும்

சகல திரைப்படங்களுக்குமுரிய (புதிய - பழைய) போஸ்டர்களையும் நீங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

# மாருதி வீடியோ விஷன்

பரமேஸ்வராச்சந்தி, திருநெல்வேலி.

(சி-8702)

28-6624, 26-8810, 27-0 05, 41-7273, 42-1046, 28-4255, 24-4323, 26-7068, 41-4176, 41-7865,

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

26-507, 24-0336, 26-3937, 26-5244, 27-5449, 41-8096, 27-5734, 26-6983, 24-1797, 41-7109, 22-9193, 26-0032, 41-7693, 28-2345, 42-3927, 43-2666, 40-2573, 26-6526, 27-5823, 27-9756, 40.2394, 27-2661, 24-9758.

## மரண அறிவித்தல்

திருமதி

### தெய்வானைப்பிள்ளை மயில்வாகனம்

வேலணை கிழக்கைச் சேர்ந்த திருமதிதெய்வானைப் பிள்ளை மயில்வாகனம் 22-ம்திகதி செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார். இவர் பேரம்பலம் மயில்வாகனத் தின் அன்புத் துணைவியாரும், வேலணை மேற்கைச் சேர்ந்த கந்தையா பொன்னையாவின் அன்பு மகளும் காலஞ்சென்ற பார்பதிப்பிள்ளை, நாகையா, தர்ம லிங்கம், காலஞ்சென்ற முருகேசு, கதிர்வேலாயுதப் பிள்ளை, பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரி யும், பேரின்பநாதன் (சோதி) [நாதன் ரேடர்ஸ், நல் லூர்], வேலாயுதநாதன் (சிவம்), சிவகலை, ஞான கலை (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், விமலாதேவி, சாந்தலக்ஸ்மி,சந்திரசேகரம், மகேந்தி ரன் ஆகியோரின் அன்புமாமியாரும் துவாரகா, அனந் மன், கயானன், கயலக்ஸ்ன், கார்த்திகேயன், நீரஜா, நிலோஸன், வினோத், வள்ளி ஆகியோரின் பேர்த்தி யும் காலஞ்சென்ற அன்னலக்ஸ்மி, காலஞ்சென்றபரா சக்தி, சண்முகரத்தினம், காலஞ்சென்ற சரஸ்வதி, சிவசுப்பிரமணியம், காலஞ்சென்ற சுப்பையா ஆகி யோரின் அன்பு மைத்துனியும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரிகை (24-2-94) வியாழக்கிழமை காலை 10 மணிக்கு 50/14 செட்டித்தெரு வீதியில் உள்ள இல் லத்தில் நடைபெறும். இத் தகவலை உற்றார், உறவி னர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்

50/14 செட்டித்தெரு, பேரம்பலம் மயில்வாகனம்

நல்லூர். (7602)

## திருநாவுக்கரசு - தனலட்சுமி

அராலியை பிறப்பிடமாகவும், ஒட்டுமடத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமான திருநாவுக்கரசு தனலட்சுமி அவர்கள் 23-02-94 அன்று காலமானார். இவர் திருநாவுக்கரசுவின் அன்புமனைவியும், பாப்பா, கண்ணன், சிவா, நித்தி, செல்வி, ஆனந்தன், ராஜீ சாரதா, காலஞ்சென்ற செந்தூரன் ஆகியோரின அருமைத் தாயாரும், நாகேந்திரராசாவின் சிறிய தாயாரும், வடிவேலுவின் மாமியாரும், தவமணி தேவியின் சகோதரியும், நடராசாவின் மைத்துனியும், ஆவார். அன்னாரின் ஈமக்கிரியை 26/7 அராலி வீதி, ஒட்டுமடம் இல்லத்தில் நடைபெற்று 24-2-94 இன்று 2 மணிக்கு கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத் துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவி னர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்:

26/7, ஒட்டுமடம்.

(7603) திருநாவுக்கரசு

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திர வீதி 81-ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1994 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது.